# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாதஇ தழ்

Tamil Monthly

மலர்: 01 | இதழ்: 03 | ஜனவரி-2023 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை

Volume: 01 | Issue: 03 | January-2023 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai





அனைவருக்கும்
புத்தாண்டு மற்றும்
பொங்கல்
நல்வாழ்த்துகள்!
2023

## இந்தியாவை தற்சார்பு நாடாக மாற்ற அறிவியல் சமூகம் பாடுபட வேண்டும்:

**108 வது அறிவியல் மாநாட்டில் பிரதமர் மோடி**


www.penakural.com







# இன்னோரா என்சுலின் ஜுஸ்

நீரிழிவு என்பது இரத்ததில் சர்க்கரையின் அதிகரிப்பை கொடுக்கக்கூடிய ஒன்று. உடல் உற்பத்தி செய்யாத அல்லது உற்பத்தி செய்த இன்சுலினைப் பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்த இயலாத நிலைமையில், இந்நோய் உள்ளவர்களின் இரத்ததில் அதிக அளவு சர்க்கரை இருக்கும். மனித உடம்பில் சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்ற இன்சுலின் அத்தியாவசியமாக உள்ளது. குறிப்பாக, இரத்த சர்க்கரை அளவு சரியாகக் கட்டுப்படுத்தப்படவில்லை எனில் மிகச் சிக்கலான நிலமைகளும் உருவாகலாம்.

**அறிகுறிகள்:** இருதய நோய், பக்கவாதம் நெடுநாள் சிறுநீரகக் கோளாறு, நீரிழிவு நோயினால் ஏற்படும் கால் புண், நீரிழிவு நோயினால் ஏற்படும் கண் நோய் என்பன ஏற்படலாம்.

இரத்ததில் அதிக அளவு சர்க்கரை இருப்பது அடிக்கடி சிறுநீர் கழித்தல், அளப்பரிய அதிகமாக தாகமெடுத்தல், அளப்பரிய பசி ஆகிய மரபார்ந்த அறிகுறிகளை உருவாக்குகின்றது.

**தடுப்பு முறைகள்:** ஆங்கில மருந்துகள் உடனே குளுகோசின் அளவைக் குறைத்தாலும் அதனால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் அதிகம். இயற்கையான மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மிகவும் சிறந்தது.

**இன்னோரம் பயோஜெனிக்ஸ்,** இயற்கை மூலிகை பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட, உயர் இரத்த சர்க்கரை நோயாளிகள், உமிழ்நீர் சுரப்பு இல்லாமல் இருக்கும் நோயாளிகள் மற்றும் எலும்பு மற்றும் மூட்டுகளில், தேய்மானம் மற்றும் இயக்க பிரச்சினை உள்ள நோயாளிகளுக்காகவே சிறப்பான முறையில் இந்த மூலிகை மருந்துகளை தயாரித்திருக்கிறோம்.

**இன்னோரா என்சுலின்** சர்க்கரை கொள்ளி (COSTUS PICTUS) இலையிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது, இது (Spiral Ginger Juice) என்றும் அழைக்கப்படுகிறது.

- ☼ என்சுலின் ஒரு சிறந்த சுவையானது, பாதுகாப்பானது மற்றும் பயனுள்ள ஜூஸ். இது உயர் இரத்த சர்க்கரைக்கும், இன்சுலின் சுரக்கும் செல்களுக்கும் தூண்டுதலை ஊக்குவிக்கிறது.
- ☼ சர்க்கரை கொள்ளி இலை ஜூஸ் எடுத்து கொண்டபின், இரத்த குளுக்கோஸ் அளவுகள், இருதய செயல்பாடுகள், கொலஸ்ட்ரால் அளவுகள், இரத்த அழுத்தம், உடல் எடையை சீராகவும் வைக்கிறது.
- ☼ காஸ்டஸ் பிக்டஸில் அதிக அளவு ஃபிளாவனாய்டுகள் (FLAVONOIDS) மற்றும் டெர்பெனாய்டுகள் (TERPENOIDS) உள்ளன, ஆக்ஸிஜனேற்றிகள் (ANTI-OXIDANTS) தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்து (FREE RADICALS) ஆக்ஸிஜனேற்ற செல் சேதத்திற்கு எதிராக பாதுகாப்பை வழங்குகின்றன.
- ☼ இன்னோரா என்சுலின் ஜூஸ் ஆரோக்கியமான, இரத்த குளுக்கோஸ் அளவை அதிகரிக்கிறது.
- ☼ இன்னோரா என்சுலின் ஜூஸில் புரோட்டீன், இரும்புச்சத்து, மெக்னீசியம் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன.
- ☼ இன்னோரா என்சுலின் சர்க்கரை மற்றும் கார்போஹைட்ரேட் (CARBOHYDRATES) உறிஞ்சுதலைக் குறைக்கிறது.

**இன்னோரம் பயோஜெனிக்ஸ் (INNORAM BIOGENICS) தயாரிப்புகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பல நோயாளிகளால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.**

# பேனா குரல்
## PENA KURAL
தமிழ் மாத இதழ்

R.Dis. No.: 939/2022

மலர்-01 இதழ்-03 ஜனவரி - 2023 விலை: ₹20/-



உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : NV சிவசங்கர்

ஆசிரியர்: ராதிகா S

நிர்வாக ஆசிரியர்: P. கார்த்திகேயன்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, N.மதிவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, V.அய்யனார், P.ஸ்டாலின் T.சிவக்குமார், M.அறிவுநிதி, M.J.சேகர்

தலைமை நிருபர்கள்:
R.ஹரிகிருஷ்ணன், B.மணிகண்டன், தமிழினி, தங்கராஜ், G.தீபக், K.மாரிதுரை, M.திலிப் குமார், N.விஜயலட்சுமி, தங்கராஜ், P.ஜேசுராஜ், J.தனசேகர்

நிருபர்கள்:
B.சரவணன், தமிழ் மணி, U.சரவணன், K.கலைமணி, D.பாமா, P.அசோக்குமார், ஜெபசீலன், K.சுபுலட்சுமி, தமிழ் வீரன், A.ஐயப்பன், அன்பு மணி, R.பிரகாஷ், T.அஜி, V.கண்ணபிரான், S.கார்த்திக், P.முகிலன், K.மணிமித்ரன்

புகைப்பட நிருபர் : V. கவியரசன்

ஓவியங்கள்: V. சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *RS Sun Printz*



பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:
**பேனா குரல்**
7/13, பொன்மனசெம்மல் தெரு,
எம்.ஜி.ஆர் நகர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600078.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.



★ பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
★ பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.




# காடுகளை அழிக்காமல் ஒரு நாடு வளர முடியாதா?

மனிதன் உள்பட பல கோடி உயிரினங்களின் அடிப்படை ஆதாரமாகக் காடுகள் விளங்குகின்றன. உலகில் 160 கோடி பேர் அன்றாட வாழ்க்கைக்கு காடுகளையே நம்பியுள்ளனர். அதுபோல் பல வகையான உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாகவும் விளங்குகிறது. இத்தகைய காடுகளானவை மனிதனின் சுயநலத்திற்காகவும், இயற்கை அனர்த்தங்களினாலும் அழிவுகளுக்கு உட்படுகின்றன. காடுகள் செழிப்பாக இருந்தால் தான் ஒரு நாடு செழிப்பாக இருக்கும் என்பதனை மறந்து காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. காடுகள் அழிப்பினால் காடுகளை நம்பிவாழும் மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. கிராம மக்கள், நகரம் நோக்கி வேலை தேடி வருகின்றனர். இதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகின்றது. இது நாட்டின் பொருளாதாரம், எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றிற்கும் தவிர்க்க முடியாத அச்சுறுத்தலாக உள்ளது.

ஒரே ஒரு மரம் அழிவதால், பறவை, பூச்சிகள், விலங்குகள் என குறைந்தது, நான்கு வகை உயிரினம் உணவு, இருப்பிடம் இழந்து, அழிகிறது. அப்படியானால் ஒரு காடு அழிவதால் எவ்வளவு உயிரினங்கள் இருப்பிடம் இழக்கும்? அழியும்? இவ்வாறு விலங்குகள், பறவைகள் பூச்சிகள் அழியும்போது அது உணவுச்சங்கிலியில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். தேனீகளும் வண்ணத்துப்பூச்சிகளும் இல்லையென்றால் இவ்வுலகமே இல்லை என்பது நாம் அறிந்ததே.


காடுகளின் பயன்பாட்டை பொதுமக்கள் அறியச் செய்ய வேண்டும்.காட்டு வளங்கள் குறைகின்றபோது, மனிதர்கள் சந்திக்கும் பின்விளைவுகள் பற்றிய கருத்தரங்குகளை பாடசாலைகளில், வேலை ஸ்தலங்களில் நடத்தலாம். அரசு கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தி, காடழிக்கப்படுவதை கட்டுப்படுத்த வேண்டும். "மீள்காடாக்கம்" செய்வதன் மூலம் காடழிப்புக்கு கடிவாளமிடலாம். காடையொட்டி வாழ்பவர்கள் தமது சிறு வருமானத்திற்காக மரங்களை வெட்டி விறகுக்காகவோ, அல்லது வேறு தேவைகளுக்காகவோ குறைந்த விலையில் விற்று வருகிறார்கள். இவர்களுக்கு ஒரு நிரந்தர வருமானம் வரும் வழியை அரசு ஏற்படுத்தி விட்டால், காடும் அழியாது. இவர்களே காட்டின் காவலர்களாகவும் மாறி விடுவார்கள்.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்




# ஒரே தேசம்-ஒரே ரேஷன் அட்டைத் திட்டத்தின் மூலம் ஏழை மக்கள் பெருமளவில் பலனடைந்துள்ளனர்:

## மத்திய அமைச்சர் திரு நரேந்திர சிங் தோமர்



ஒரே தேசம்- ஒரே ரேஷன் அட்டைத் திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான ஏழை மக்கள் பலனடைந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு நரேந்திர சிங் தோமர் தெரிவித்துள்ளார். பிரதமரின் பிரதான் மந்திரி கரிப் கல்யாண அன்ன யோஜனா எனப்படும் ஏழைகள் நலவாழ்வுத் திட்டம் மூலம் மத்திய அரசு ஏழைகளுக்கு ரூ.3.90 லட்சம் கோடி மதிப்பிலான உணவு தானியங்களை இலவசமாக வழங்கியிருப்பதாக கூறினார்.

வேளாண்மை, நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோகத்துறையின் சாதனைகள் குறித்து கருத்து தெரிவித்த அவர், கொரோனா பெருந்தொற்று காரணமாக மக்கள் பாதிக்கபட்டிருந்த நிலையில், திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ரேஷன் கடைகள் மூலம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களில், தனி நபருக்கு மாதத்திற்கு 5 கிலோ அரிசி அல்லது கோதுமையை இலவசமாக வழங்கியதை சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் கடந்த 2019ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரே தேசம்ஒரே ரேஷன் அட்டைத் திட்டம் தற்போது 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள விரிவுப்படுத்தப்பட்டு இருப்பதாக கூறினார். இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டார்.

2022-23ம் ஆண்டின் கரீப் சந்தை பருவத்தில் டிசம்பர் 4ம் தேதி வரை விவசாயிகளிடமிருந்து 339.88 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதாகவும், 30 லட்சம் விவசாயிகளுக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதேநேரத்தில் 2021-22ம் ஆண்டில் சாதனை அளவாக நெல் கொள்முதலுக்கு ரூ. 2.75 லட்சம் கோடியை விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கி மத்திய அரசு விவசாயிகளின் நலன் காக்கும் அரசாக இருப்பதை உறுதி செய்திருப்பதாகவும் மத்திய அமைச்சர் திரு நரேந்திர சிங் தோமர் தெரிவித்துள்ளார்.

– D.பாமா

# சென்னையில் 1000 அரங்குகளுடன் சர்வதேச 46வதுபுத்தக கண்காட்சி

## முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



சென்னையில் 46வது புத்தக கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 06.01.2023 அன்று மாலை தொடங்கி வைத்தார்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சென்னை புத்தக கண்காட்சி இந்தாண்டு சர்வதேச அளவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் 46வது சென்னை புத்தக கண்காட்சி சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் இன்று தொடங்கியுள்ளது.

1,000 அரங்குடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும் இந்த புத்தக கண்காட்சி வருகின்ற 22 தேதி வரை நடைபெற உள்ளது. அதுவரை தினமும் காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரை இந்த கண்காட்சிக்கு பொது மக்கள் வருகைத் தரலாம்.

கடந்த ஆண்டு புத்தக கண்காட்சியில் 800 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது, இந்த ஆண்டு கூடுதலாக 200 அரங்குகள் என மொத்தம் 1,000 அரங்குகள் அமைந்துள்ளது.

சென்னை புத்தக கண்காட்சி துவக்கி வைக்கும் நிகழ்ச்சியில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.வயிரவன், செயலாளர் எஸ்.கே. முருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த புத்தக கண்காட்சியில் பல்வேறு தொகுப்புகளுடன், சிறுவர்களுக்கான புத்தகங்கள் அடங்கிய அரங்குகள் பிரத்யேகமாக அமைக்கப்பட்டு உள்ளன. அதேபோல் சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் அரங்குகள் அமைத்துள்ளனர்.

– நா வீ சிவசங்கர்

# காசி தமிழ் சங்கமம்: தமிழ்நாட்டுக்கும் காசிக்கும் இருக்கும் தொடர்பு குறித்து

## இலக்கியங்கள் சொல்வது என்ன?

இந்திய விடுதலையின் 75ஆம் ஆண்டு நிறைவை அனுசரிக்கும் 'விடுதலையின் அமுதப் பெருவிழா'வின் ஓர் அங்கமாக 'காசி தமிழ் சங்கமம்' நிகழ்வை உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் இந்திய அரசு ஒரு மாத காலம் நடத்துகிறது.

நவம்பர் 17 முதல் டிசம்பர் 16 வரை வாரணாசியில் இந்திய கல்வி அமைச்சகம் நடத்தும் இந்த ஒரு மாத கால நிகழ்வு நவம்பர் 19ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோதியால் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

இது தமிழ்நாட்டுக்கும் வாரணாசிக்கு இருக்கும் நீண்டகாலப் பண்பாட்டுத் தொடர்புகளை மேம்படுத்தும் முயற்சி என ஒரு தரப்பினரும், மத்திய அரசு உயர்கல்வி நிறுவனங்கள், போட்டித் தேர்வுகள், அலுவல்பூர்வ தொடர்பாடல்கள் உள்ளிட்டவற்றில் இந்தியை முன்னிறுத்தும் நரேந்திர மோதி அரசு தமிழை வைத்து பாரதிய ஜனதா கட்சிக்கு அரசியல் ஆதாயம் தேச முயற்சிப்பதாக இன்னொரு தரப்பினரும் 'காசி தமிழ் சங்கமம்' குறித்து கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

காசி மற்றும் பனாரஸ் ஆகிய பெயர்களிலும் பரவலாக அறியப்படும் வாரணாசி நரேந்திர மோதி பிரதிநித்துவப்படுத்தும் மக்களவைத் தொகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல நூற்றாண்டு காலமாகவே காசி மற்றும் தமிழ்நாட்டுக்கு வரலாறு, வழிபாடு, பண்பாடு மற்றும் மொழி ரீதியிலான தொடர்புகள் உள்ளன. அவற்றில் சில முக்கியமான மற்றும் சுவாரசியமான தகவல்கள் இங்கே.

**தலைவி தோழி உரையாடலில் வாரணாசி**

சங்க காலத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் கபிலர் எழுதிய பாடல் ஒன்றில் வாரணாசி பற்றிய குறிப்பு ஒன்று உள்ளது.

எட்டுத்தொகை நூல்கள் கி.மு காலகட்டத்தைச் சேர்ந்தவை.

கலித்தொகையில் 60ஆம் பாடலில் தலைவி தன் தோழியிடம் கூறுவது போல பின்வரும் வரிகள் உள்ளன.

"தெருவின்கண் காரணம் இன்றிக் கலங்குவார்க் கண்டு நீ
வாரணவாசிப் பதம் பெயர்த்தல் ஏதில
நீ நின்மேல் கொள்வது எவன்?"

காசி தமிழ் சங்கமம்
काशी तमिल संगमम्
KASHI TAMIL SANGAMAM

இந்தக் குறிஞ்சித் திணை பாடல் தலைவியும் அவளது தோழியும் தலைவன் குறித்து பேசும் ஒரு காதல் தன்மையுள்ள பாடல்தான். ஆனால், 'வாரணாசி செல்வோர்க்கெல்லாம் முக்தி கிடைப்பதைப் போல' என்று பொருள்படும் வகையிலான ஓர் உவமை இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'வாரணவாசி' எனும் இந்தச் சொல் வாரணாசி / காசியைக் குறிக்கிறது.

**திருநாவுக்கரசரின் வாரணாசி பயணம்**

நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் தமிழ் உலகில் சைவ சமயம் சார்ந்த பக்தி இயக்கத்தை பரப்பிய சிவனடியார்களுள் முக்கியமானவர். சைவர்களின் கடவுளான சிவபெருமானே வாரணாசியில் காசி விஸ்வநாதர் என்ற பெயரில் வணங்கப்படுகிறார்.

12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரிய புராணம் திருநாவுக்கரசரின் வரலாற்றைப் பற்றிக் கூறும்போது காசியை 'வாரணாசி' என்ற பெயரில் குறிப்பிடுகிறது.

**அன்ன நாடு கடந்து கங்கை**
**அணைந்து சென்று வலம் கொளும்**
**மின்னு வேணியர் வாரணாசி**
**விருப்பினோடு பணிந்து உடன்**




பின் அணைந்தவர் தம்மை அங்கண்
ஒழிந்து கங்கை கடந்து போய்
மன்னு காதல் செய் நாவின்
மன்னவர் வந்து கற்சுரம் முந்தினார்

''கங்கையாறு வந்து சென்று வலமாக வரும், ஒளி நிறைந்த சடையுடைய சிவ பெருமான் எழுந்தருளிய வாரணாசியை விருப்பத்துடன் வணங்கிவிட்டு, தம்முடன் வந்த அடியவர்களை அவ்விடத்தில் விட்டுவிட்டு, கங்கைக் கரையைக் கடந்து, பொருந்திய காதல் செய்யும் திருநாவுக்கரசர், கல் நிரம்பிய மலைக் கானல்களைக் கடந்தார்,'' என்று திருநாவுக்கரசரின் பயணத்தை இந்தப் பாடல் விவரிக்கிறது.

**முருகனைப் போற்றிய திருப்புகழில் 'காசி'**

தமிழ்நாட்டில் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் எழுதிய திருப்புகழ், தமிழ் மொழியில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்களில் மிகவும் முக்கியனவற்றுள் ஒன்று.

"கான கக்குற மாதை மேவிய
ஞான சொற்கும ராப ராபர
காசி யிற்பிர தாப மாயுறை
மங்கைக் கணவனும் வாழ்சிவ ணாமயல்
பங்கப் படமிசை யேபனி போல்மதம்
வந்துட் பெருகிட வேவிதி யானவ"

என்ற பாடலில் 'காசி' குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்புகழ் முருகக் கடவுளைப் போற்றி எழுதப்பட்ட இலக்கியம். இதில் முருகனின் பிறப்பைப் போற்றும் அருணகிரிநாதர், 'காசியில் முதன்மையாக அமர்ந்திருக்கும் கடவுளும் அவரது மனைவியும்' பெற்றெடுத்த மகன் என்று முருகனைப் பற்றிக் குறிப்பிடும்போது முருகனின் தந்தையாகக் கூறப்படும் சிவன் இருக்கும் ஊராக காசியைக் குறிப்பிட்டுள்ளார்.

**காசி - சிவகாசி - தென்காசி: புராணங்கள் சொல்வது என்ன?**

இலக்கியங்களில் மட்டுமல்லாமல் வரலாற்று ரீதியிலும் காசி தமிழ்நாடு தொடர்புகள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள பல சிவன் கோவில்களுக்கு 'காசி விஸ்வநாதர் கோவில்' என்ற பெயர் உள்ளதே இதற்கு ஒரு முக்கியச் சான்று.

தென்காசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் உள்ள கல்வெட்டுகள் வாரணாசி நகரை உத்தர காசி என்று சுட்டுகின்றன. 'உத்தர்' என்றால் வடமொழியில் வடக்கு என்று பொருள். தென்காசி 'தக்ஷிண காசி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தக்ஷிண்' என்றால் தெற்கு என்று பொருள்.

இந்தக் கோவில் கட்டுமானம் 15ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் பராக்கிரும பாண்டியனால் தொடங்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் நடக்கும்போதே அம்மன்னன் மரணமடைந்துவிட்டதால் அதற்குப் பின்னர் அரியணை ஏறிய குலசேகர பாண்டியனால் கட்டி முடிக்கப்பட்டது.

மதுரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த பராக்கிரும பாண்டியன் காசியில் இருந்து சிவலிங்கம் ஒன்றை எடுத்துவந்து மதுரையில் சிவன் கோவில் கட்ட விரும்பியதாகவும், அதற்காக காசி பயணித்ததாகவும் ஒரு நம்பிக்கை உண்டு.

அப்படி வரும் வழியில் அந்த லிங்கத்தை அவர் உறங்குவதற்காக மரத்தடியில் படுத்திருந்த, ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்ததாகவும், பிறகு அதை அங்கிருந்து தூக்க முடியாததால், அதை அங்கேயே விட்டுவிட்டு, தென்காசியில் வந்து கோவில் ஒன்றை எழுப்பியதாகவும் சமய நம்பிக்கை ஒன்று உலவுகிறது. அதுவே 'சிவகாசி' என்று ஆனது என்பது புராணங்களில் கூறப்படும் நம்பிக்கையாக உள்ளது.

இந்தப் புராண நம்பிக்கையை அறுதியிட்டுச் சொல்லும் வரலாற்று ஆவணங்கள் போதுமான அளவுக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

**பத்தாம் நூற்றாண்டு சித்தர் பாடல்**

பதினெண் சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் கி.பி. பத்தாம் நூற்றாண்டு காலகட்டத்தில் வாழ்ந்தவர். அவர் எழுதிய பாடல்களின் தொகுப்பான சிவவாக்கியம் எனும் நூலில் காசி குறிப்பிடப்பட்டுள்ளது.

**"ஒளியதான காசிமீது வந்துதங்கு வோர்க்கெலாம் வெளியதான சோதிமேனி விசுவநாத னானவன் தெளியுமங்கை யுடனிருந்து செப்புகின்ற தாரகம் வெளிதோர் ராமராம நாமமிந்த நாமமே."**

ஒளி நிறைந்த காசி நகரில் உள்ள விஸ்வநாதன் என்று சிவபெருமானைப் போற்றி சிவவாக்கியர் இந்தப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

'சித்தர் வாக்கு; சிவன் வாக்கு' என்றே தமிழில் ஒரு பிரபலமான சொலவடை இருக்கிறது. அப்படிப்பட்ட சித்தர்களில் ஒருவரே சிவன் குறித்து பாடிய பாடலில் காசியைச் சுட்டியுள்ளார்.

**தேவாரத்தில் வாரணாசி**

வாரணாசி அப்பர் மற்றும் சுந்தரர் தேவாரத்தில் வைப்புத் தலமாக குறிப்பிடப்பட்டுள்ள தலமாகும். ஒரு குறிப்பிட்ட தலத்தைப் பற்றிப் பாடாமல், பாடல்களுக்கு இடையே சுட்டப்படும் தலங்கள் வைப்புத் தலங்கள் எனப்படுகின்றன.

சம்பந்தரின் 2ஆம் திருமுறையில் 39ஆம் பதிகத்தில் 7வது பாடலில் காசி பற்றிய குறிப்புள்ளது.

**"மாட்டூர் மடப் பாச்சிலாச்சிராமம் மயிண்டீச்சரம் வாதவூர் வாரணாசி**
**காட்டூர் கடம்பூர் படம்பக்கம் கொட்டும் கடல் ஒற்றியூர் மற்று உறையூர் அவையும்**
**கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமும் கொடுங்கோவலூர் திருக் குணவாயில்."**

எனும் பாடல் சிவ பெருமானுக்கு கோவில் உள்ள ஊர்களில் வாரணாசியும் ஒன்று எனக் குறிப்பிடுகிறது.

திருநாவுக்கரசரின் 6ஆம் திருமுறையில் 70ஆம் பதிகத்தில் வாரணாசி பற்றி குறிப்பிடப்படுகிறது. எந்தெந்த ஊர்களில் கயிலாயநாதன் என்று அழைக்கப்படும் சிவபெருமானைக் காணலாம் என்று கூறப்படும் பட்டியலில் தேவாரம் வாரணாசியையும் குறிப்பிடுகிறது. அந்தப் பாடல் கீழ்வருமாறு.

**"மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்**
**வக்கரை மந்தாரம் வாரணாசி**
**வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி**
**விளமர் விராடபுரம் வேட்களத்தும்**
**பெண்ணை அருட்டுறை தண் பெண்ணாகடம்**
**பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்**
**கண்ணை களர் காறை கழிப்பாலையும்**
**கயிலாய நாதனையே காணலாமே."**

இங்கே தொகுக்கப்பட்டுள்ளவை பரவலாக அறியப்பட்ட சில இலக்கியச் சான்றுகள் மற்றும் புராணத் தகவல்கள் மட்டுமே. வேறு பல இலக்கியங்களில் காசி / வாரணாசி பற்றிய குறிப்புகள் உள்ளன.

**– G.தீபக்**


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |

**PENA KURAL**, Tamil Monthly

Administrative Office:
**3/885, Pillaiyar Kovil Street, (Opp Bajanai Kovil), Mettukuppam, OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**

**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிறுத்தும் உணவகங்கள்

# விதிக்கப்பட்ட நிபந்தனைகளை கடைபிடிக்கிறதா?



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் உணவகத்தில் நிறுத்தம் செய்ய நிபந்தனைகள் உள்ளது.

* உணவகத்தில் பரிமாறப்படும் உணவு வகைகள் தரம் மற்றும் சுவை உள்ளதாக இருக்க வேண்டும்.

* மேலும் சைவ உணவு மட்டும்தான் தயார் செய்ய வேண்டும். கழிப்பிட வசதி இலவசமாக இருக்க வேண்டும்.

* உணவகம் மற்றும் அதன் சுற்றுப்புறம் சுத்தமாக இருக்கும்படி, பராமரிக்க வேண்டும்.

* உணவகத்தில் உள்ள கழிவறை சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும்.

* கழிப்பிட வசதி இலவசமாக இருக்க வேண்டும். பயணிகளுக்கு கழிவறையில் தண்ணீர் வசதி எப்பொழுதும் இருக்க வேண்டும். கழிவறையை கம்பரஷர் மூலம் தான் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும். பயோ–கழிவறை இருக்க வேண்டும்.

* பேருந்துகள் உணவகத்திலிருந்து வெளியே வரும்போது ஓட்டுனருக்கு நெடுஞ்சாலையிலிருந்து வரும் பேருந்துகள் தெளிவாகத் தெரியும்படி உணவகத்தின் இடம் இருக்க வேண்டும்.

* உணவக வளாகத்தில் பயணிகளின் பாதுகாப்பு கருதி CCTV பொருத்தியிருக்க வேண்டும்.

* பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் மற்றும் அவர்தம் உடமைகளுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும்.

* பயணிகள் அருந்துவதற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும்.

* உணவகத்தில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலைப்பட்டியல் பலகை பயணிகளுக்கு தெரியும்படி வைக்கப்பட வேண்டும்.

* உணவகத்தில் விற்கப்படும் அனைத்து பொருட்களும் நியாயமான விலையில் M.R.P., விலையை விட அதிகமில்லாமல் இருக்க வேண்டும்.

* உணவகத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகளில் உள்ள பயணிகளுக்கு ஏதேனும் இடையூறு தரும் செயலோ, புண்படும் வகையிலான செயல்கள் ஏற்படா வண்ணம் இருக்க வேண்டும்.

* உணவக முன்புற வாயிலில் பூட்டப்பட்டுள்ள புகார் பெட்டி வைத்திருக்க வேண்டும்.

* பேருந்து நிறுத்தம் செய்யும் இடம் கான்கிரீட் தளமாக (அல்லது) Pavar Block போட்டிருக்க வேண்டும்.

* "அரசு போக்குவரத்து கழகத்தால் இந்த உணவகம் அங்கீகரிக்கப்பட்டது" என பலகை இருக்க வேண்டும்.

உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்துள்ளது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம். எந்தவித புகாருமின்றி பயணிகளின் உணவுக்காக பேருந்துகளை நிறுத்தி முறையாக உத்தரவை பின்பற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் இயக்கப்பட்ட விவரம், உணவுக்காக நிறுத்திய விவரங்களை வாட்ஸ் அப் மூலமாக தெரிவிக்க வேண்டும் என்று அனைத்து கிளை மேலாளர்கள் மற்றும் ஓட்டுநர், நடத்துனர்களுக்கு போக்குவரத்துத்துறை உத்தரவிட்டுள்ளது.

மேற்கண்டவற்றில் ஏதேனும் உணவகட்த்தில் குறைகள் இருப்பின் பயணிகள் 9445014436 என்ற எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம்.

**– தமிழ் வீரன்**



# குளிர்காலத்தில் 'காது வலி' வருவது ஏன்?

மார்கழி, தை, மாசி மாதங்களின் போது குளிரால் தமிழ்நாட்டு மக்களுக்கு உடலில் சில பாதிப்புகள் ஏற்படும். அதிலும் குறிப்பாக குளிர் காலத்தின் போது முதியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் காது வலி அடிக்கடி ஏற்படும். இதிலிருந்து மீள என்ன செய்யலாம் என மருத்துவகள் விளக்கம் அளித்து உள்ளனர்.

குளிர்காலத்தின் போது ஏற்படும் காது வலி இயல்பானது என நம்மில் பலர் எண்ணுகின்றனர். ஆனால் உரிய நேரத்தில் கவனிக்கத் தவறினால், காதில் ஏற்படும் வலி அதிகரிக்கும். குளிர்காலத்தில் நமக்கு ஏன் காது வலி ஏற்படுகிறது? இதை எப்படி சமாளிப்பது என்று பார்ப்போம்.

**குளிர்காலத்தில் காதுகளில் எதனால் வலி ஏற்படுகிறது?**

நமது மூக்கையும் காதையும் இணைக்கும் ஒரு குழாய் தான் இதற்குக் காரணம். யூஸ்டேஷியன் குழாய் (Eustachian Tube) என்று அழைக்கப்படும் இந்தக் குழாய், குளிர் காலத்தின் போது மூக்கின் வழியாக உடலுக்குள் நுழையும் வறண்ட குளிர் காற்றின் காரணமாக மூடிக்கொள்கிறது. இந்தக் குழாய் மூடுவதன் விளைவாக, காது சவ்வுகள் இழுக்கப்பட்டு நமக்கு காது வலி ஏற்படுகிறது. அது மட்டுமின்றி உடலில் மற்ற பாகங்களில் இருப்பதைப் போல நமது வெளிப்புற காதுகளில் கொழுப்பு கிடையாது. இதன் காரணமாக காதுகளைச் சுற்றி எந்தப் பாதுகாப்பும் இல்லை. விலங்குகள் குளிர் காலத்தின் போது தங்களைப் பாதுகாத்து கொள்ள காதுகளை வைத்து முகத்தை மூடிக்கொள்ளும், ஆனால் மனிதர்களுக்கு இத்தகைய அமைப்பு இல்லாததால் குளிர்காலத்தின் போது நமது காதுகளுக்கு வலி ஏற்படும்.

**யாருக்கெல்லாம் குளிர்காலத்தின் போது காது வலி ஏற்படும்?**

குழந்தைகளுக்கு இருக்கும் யூஸ்டேஷியன் குழாய் அளவில் சிறியதாக இருக்கும். இதனால் குழந்தைகளுக்கு குளிர்காலத்தின் போது காது வலி ஏற்படுகிறது. அதே போல முதியவர்களுக்கும் குளிர்காலத்தில் வலி ஏற்படும் வாய்ப்புள்ளது. பெண்களைப் பொறுத்தவரை 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இந்தப் பிரச்னை ஏற்பட வாய்ப்புள்ளது.

**காது வலி ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?**

குழந்தைகள், முதியவர்கள் குளிர்காலத்தில் வீட்டில் இருக்கும் போது வெளிப்புற காதுகளை முழுவதுமாக மூடும் வகையில் குல்லா அணிந்து கொள்வதன் மூலம், வறண்ட குளிர்காற்று காதுக்குள் செல்வதைத் தடுக்க முடியும். வெளியே செல்லும் போது காதையும், மூக்கையும் சேர்த்து மூடும் வகையில் ஸ்கார்ஃப் அணிந்து கொள்ளலாம். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அணிவதைப் போன்று வெளியே செல்லும் போது ஸ்கார்ஃப் அணிந்து சென்றால், காது வலி ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

**தமிழ்நாட்டில் இருக்கும் நபர்களுக்கு எந்த மாதங்களில் குளிரால் ஏற்படும் காது வலி ஏற்படுகிறது?**

பொதுவாக டிசம்பர் மாதத்தில் தான் தமிழ்நாட்டில் குளிர்காலம் தொடங்கும் என்றாலும், பருவமழைக்காலமான அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை குளிந்த காற்று வீசக்கூடும். அதனால் இந்தக் காலகட்டங்களில் நாம் பாதுகாப்பாக இருப்பது நல்லது.

**சளி, மூக்கடைப்பு பிரச்னையால் காது வலி வருமா?**

குளிர்காலத்தின் போது காற்றில் வழக்கத்தைவிட அதிகமாக தூசு நிறைந்து இருக்கும். இதன் காரணமாக நாம் சுவாசிக்கும் காற்று மூக்கு வழியாக நுழையும் போது அலர்ஜி ஏற்படுகிறது. இதனால் சளி தொந்தரவு இருக்கும் நபர்களுக்கு யூஸ்டேஷியன் குழாயினுள் தூசு நுழைவதன் காரணமாக காது வலி இயல்பாகவே ஏற்படுகிறது. இது மட்டுமின்றி குளிர்காலத்தின் போது வெட்டவெளிகளில் பணியாற்றும் விவசாயி போன்ற நபர்களில் வெகு சிலருக்கு ஒரு பிரச்னை ஏற்படுகிறது. காதில் ஏற்படும் வலியின் காரணமாக முகத்துடன் இணைந்துள்ள நரம்பில் அழுத்தம் ஏற்பட்டு, அந்த நரம்பின் செயல்பாடு பாதிப்புக்குள்ளாகிறது. இதன் விளைவாக முகத்தில் உள்ள தசைகள் வேலை செய்யாமல் போகின்றன. இதை மருத்துவ குறிப்பில் பெல்ஸ் பாலஸி (Bell's Palsy) என்று அழைக்கிறார்கள். இந்த பாதிப்பு பிரபல பாடகர் ஜஸ்டின் பீபருக்கு சமீபத்தில் ஏற்பட்டது.

**சைனஸ் தொந்தரவு இருக்கும் நபர்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும்?**

குளிர் காலத்தின் போது நிலவும் வறண்ட குளிர் காற்றினால், சைனஸ் பிரச்னை உள்ள நபர்களின் மூக்குகளுக்கு உள்ளே இருக்கும் சதைகள் வீங்கும். இதனால் அவர்களுக்கு காது வலி, தலை வலி போன்ற உபாதைகள் ஏற்படும். மற்ற நபர்களை விட சைனஸ் பாதிப்பு இருக்கும் நபர்களுக்கு குளிர்காலத்தின் போது காது வலி ஏற்படும் வாய்ப்பு அதிகம்.


**காது வலி ஏற்படும் போது என்ன சிகிச்சை எடுக்க வேண்டும்?**

காது வலி ஏற்பட்ட உடன் மருந்துகளோ, மருத்துவரையோ அணுக வேண்டிய அவசியம் இல்லை. முதல் கட்டமாக குளிர் காலத்தில் வெளியே சென்று வந்த பிறகு, ஆவி பிடிப்பது நல்லது. இப்படி செய்வதன் மூலம் மூக்கினுள் ஈரப்பதம் நிறைந்த சூடான காற்று செல்வதன் வழியே நிவாரணம் கிடைக்கும். அதன் பிறகும் வலி இருந்தால், மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது அவசியம்.

**– தமிழ்மணி**

# யூட்யூப் சேனல்கள் மூலம் தவறான தகவல்கள் பரப்பப்பட்டதை கண்டுபிடித்தது

## மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம்




மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மைத் தன்மையை கண்டறியும் பிரிவு, நடத்திய ஆய்வில் 6 யூட்யூப் சேனல்கள் ஒருங்கிணைந்து தவறான தகவல்களை பரப்பியதை கண்டுபிடித்துள்ளது. இதற்கென 6 தனி ட்விட்டர் கணக்குகளை கையாண்டு சேனல்களில் தவறான தகவல் பரப்பலை இந்தப்பிரிவு முறியடித்துள்ளது. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை சார்பில் இதுபோன்ற ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்கப்படுவது இரண்டாவது முறையாகும். முன்னதாக கடந்த ஆண்டு டிசம்பர் 20ம் தேதி பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மைத்தன்மை கண்டறியும் பிரிவு நடத்திய ஆய்வில் 3 யூட்யூப் சேனல்கள் தவறான தகவல்களை பரப்பியது கண்டறியப்பட்டது.

நேஷன் டிவி, சம்வாட் டிவி, சரோகர் பாரத், நேஷன் 24, ஸ்வர்னிம் பாரத், சம்வாட் சமாச்சார் ஆகிய இந்த 6 யூட்யூப் சேனல்களும் உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பி 20 லட்சம் சந்தாதாரர்களை கொண்டியிருப்பதும், அவர்கள் 51 கோடிக்கும் அதிகமான முறை இந்த தவறான தகவல்களைக் கொண்ட வீடியோக்களை பார்த்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சேனல்கள், தேர்தல், உச்சநீதிமன்ற விசாரணை, மத்திய அரசு ஆகியவை குறித்த உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்பி யிருக்கின்றன. உதாரணமாக, மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு தடை, குடியரசுத்தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பெயரிலான அறிக்கைகள் என்ற பெயரில் தவறான மற்றும் உண்மைக்கு புறம்பான செய்திகளை பரப்பியிருப்பதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

**– V. சந்தோஷ் குமார்**



# அனைத்துப் பள்ளிகளிலும் கைகழுவும் வசதிகளை ஏற்படுத்தவும் மாணவர்களுக்குத் தூய்மைக் குறித்த கல்வியைக் கற்பிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு

## மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது

நாடு முழுவதும் அனைத்துப் பள்ளிகளிலும் சோப்புகளைப் பயன்படுத்தி கைகளைக் கழுவும் வசதிகளை ஏற்படுத்தவும் மாணவர்களுக்குத் தூய்மைக் குறித்த கல்வியைக் கற்பிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை, கல்வி அமைச்சகம், நீர்வள அமைச்சகம், நிதி ஆயோக், கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆகியவை கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளது. இதில், அனைத்து பள்ளிகளிலும், கழிப்பறைகள், முறையாக செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

அரசு பள்ளிகளில் தூய்மை வசதிகளை மேம்படுத்துதல், பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் மற்றும் ஒட்டுமொத்த தூய்மைப் பணிகளைப்பராமரித்தல்,உள்ளிட்ட அடிப்படை உள்கட்டமைப்புகளை மறுசீரமைத்தல், ஆகியவற்றுக்கு அரசு நீண்டகாலமாக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், நமது குழந்தைகளின் நல்ல ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை உறுதி செய்ய பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பான குழாய் மூலம் குடிநீர், வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் உள்ள 10.22 லட்சம் அரசு பள்ளிகளில் 9.83 லட்சம் அரசு பள்ளிகளில் (சுமார் 96%) குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

– **தமிழினி**

# இந்தியாவை மிகப் பெரிய ராணுவ சக்தியாக உலகம் அங்கீகரித்துள்ளது: பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்




இந்தியாவை மிகப் பெரிய ராணுவ சக்தியாக உலகம் அங்கீகரித்துள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். கேரள மாநிலம் சிவகிரி மடத்தில் நடைபெற்ற தீர்த்ததான மகோத்சவ் நிகழ்ச்சியில் துறவிகள் மற்றும் ஆன்மீக பெரியோர்கள் மத்தியில் அவர் இன்று உரையாற்றினார். அரசின் தற்சார்பு இந்தியா கொள்கை தொழில் மூலம் வளம் என்பதை ஊக்குவிப்பதாகவும், இதன் காரணமாகவே நாட்டின் ராணுவ பலம் அதிகரித்து வருவதாகவும், உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடாக இந்தியா தற்போது திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் எல்லைகளை துணிச்சலுடனும் தைரியத்துடனும் ராணுவ வீரர்கள் பாதுகாத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

கல்வி, தூய்மை போன்ற விஷயங்களில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஸ்ரீ நாராயண குரு அறிவுறுத்தியதாகவும் இது அவரது தொலைநோக்குப் பார்வையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைச்சர் கூறினார். இந்த விஷயங்களில் அரசும் அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

தற்சார்பு என்பது இந்திய கலாச்சாரத்தில் ஒருங்கிணைந்த பகுதி என்று அவர் தெரிவித்தார். தற்சார்பு தொடர்பான தகவல்களை ஸ்ரீ நாராயண குரு பரப்பியதாகவும் தற்போது அந்தப் பணியை சிவகிரி மடமும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் கூறினார். நாராயண குரு நவீனத்திற்கு ஆதரவாக மட்டுமேயல்லாமல், பழங்கால கலாச்சாரம் மற்றும் நவீனத்திற்கு இடையே சமநிலையைப் பராமரித்ததாகவும், இது தற்போதும் நாட்டுக்கு பொருத்தமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

சமத்துவம், விடுதலை மற்றும் சகோதரத்துவம் ஆகியவை மேற்கத்திய தத்துவம் என கருதப்படுவதாகக் கூறிய அவர், உண்மையில் இவை பழங்கால இந்திய இலக்கியங்கள் மற்றும் பாரம்பரியத்தில் பரவலாகக் காணப்படுகின்றன என்றார். மேற்கத்திய நாடுகள் சமத்துவம், விடுதலை மற்றும் சகோதரத்துவம் எனப் பேசும் நிலையில், இந்திய பாரம்பரியத்தில் வசுதைவ குடும்பகம் என்று நாம் கூறுவதாக அவர் குறிப்பிட்டார். வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, ராமாயணம் உள்ளிட்டவற்றின் சமத்துவம் மற்றும் ஒற்றுமை குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதையும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் எடுத்துரைத்தார்.

– P.கார்த்திகேயன்

# வடமாநில தொழிலாளர்களால்

# தமிழ்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுமா?

தமிழ் நாட்டில் பல தொழில் நிறுவனங்களில் அங்கு வேலை செய்யும் ஆண், பெண் இருபாலரும் தென் மாவட்டங்களை சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் பேசுகிற தமிழே அதை அடையாளம் காட்டும். இன்று அந்த நிறுவனங்களில்கூட திக்கித்திக்கி இந்தி கலந்து தமிழ் பேசுகிற வட மாநிலத்தவரை காண முடிகிறது. அதாவது பானி பூரி விற்பதில் தொடங்கி, கட்டிட வேலைகள், மெட்ரோ பணிகள், ஓட்டல் வேலைகள், ஜவுளிக்கடைகள், வீட்டு வேலைகள், தோட்ட வேலைகள், இறைச்சி கடைகள், மீன் வெட்டுதல், முடி வெட்டுதல் என அனைத்து வேலைகளுக்கும் வந்துவிட்டனர். சென்னை, கோவை போன்ற நகரங்களில் மட்டுமே வேலைக்கு வந்த வடமாநிலத்தவர்கள் தற்போது தமிழகம் முழுவதும் பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து தொழில்களிலும் பரவி விட்டனர்.

அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பை நாம் அங்கீகரித்துத்தான் ஆகவேண்டும். குறைந்த சம்பளம் என்றாலும் கூடுதல் நேரம் உழைக்கிறார்கள். அதை வரவேற்றுத்தான் தீரவேண்டும். நம்மவர்கள் என்ன செய்கிறார்கள்? பசி வயிற்றில் இருந்தால்தானே அவர்களுக்கு வேலையில் பக்தி வரும்? இலவசங்கள் அவர்களை சோம்பேறி ஆக்கிவிட்டதாக யாரை கேட்டாலும் சொல்கிறார்கள்.

எந்த வேலை என்றாலும் நம்மவர்கள் கூடுதல் சம்பளம் எதிர்பார்க்கிறார்கள். அதே வேளை குறைந்த நேரம் மட்டுமே வேலை பார்க்கிறார்கள். அர்ப்பணிப்பு குணம் குறைந்து போய்விட்டது. 'இஷ்டம் இருந்தால் வேலை தா! இல்லை என்றால் போ!' என்ற மனநிலையில் இருக்கிறார்கள். கிராமங்களில்கூட இந்த நிலைதான் இருக்கிறது. அதனால்தான் நம்மவர்கள் இருந்தும் வடமாநில தொழிலாளர்களுக்கு நாமே சிவப்பு கம்பளம் விரிக்க நேருவதாக சொல்கிறார்கள்.

கட்டிட தொழில்களில் வடமாநிலத்தவர்கள் அதிகமானோர் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த நேரத்திற்கு வரும் அவர்கள் வேலையை முடிக்க கால தாமதம் ஆனாலும் அதை முடித்து விட்டுதான் செல்கின்றனர். வேலையிலும் சுணக்கம் ஏற்படுத்துவதில்லை. கடினமான வேலையும் செய்கின்றனர். அவர்கள் சம்பளமும் குறைவாகதான் வாங்குகிறார்கள். ஆண்டுக்கு ஒன்று அல்லது 2 முறை தான் ஊருக்கு செல்வதால் வேலையிலும் தொய்வு ஏற்படுவதில்லை. இதன் மூலம் குறித்த மாதத்திற்குள் வீடுகளை கட்டி முடிக்க முடிகிறது. இந்தி மொழி தெரியாததால் சில விஷயங்களை சரியாக விளக்க முடியாததுதான் பிரச்சினையாக உள்ளது என்று தெறிவிக்கின்றனர்..

**தலைவாசல் பகுதியை சேர்ந்த கோழிப்பண்ணை உரிமையாளர் சரவணன்:** தலைவாசல் பகுதியில் கோழிப்பண்ணை உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் வடமாநில தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். இவர்கள் நேரம் பார்க்காமல் வேலை பார்ப்பதாலும், மற்றவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தை விட சற்று குறைவாக வாங்குவதாலும் பல நிறுவனங்களின் உரிமையாளர்கள் இவர்களை வேலைக்கு நியமித்து வருகின்றனர். கடினமான வேலையாக இருந்தாலும் முகம் சுழிக்காமல் பார்க்கின்றனர். மேலும் அவர்கள் அங்கேயே குடும்பத்துடன் தங்குவதால், ஏதாவது அவசர வேலை என்றால் உடனடியாக அழைத்து அந்த வேலையை முடிக்க ஏதுவாக இருக்கிறது. இதுதவிர அவர்கள் அடிக்கடி விடுமுறை எடுக்காததால் தொழிலில் பாதிப்பு ஏற்படாது.

**தாரமங்கலம் பகுதியை சேர்ந்த ஓட்டல் உரிமையாளர் பெருமாள்:** தற்போது ஓட்டல் வேலைக்கு தொழிலாளர்கள் கிடைப்பது மிகவும் குறைந்து வருகிறது. இதனால் ஓட்டலில் மாஸ்டர், சப்ளையர் உள்ளிட்ட வேலைக்கு கூடுதலாக வட மாநில தொழிலாளர்களை அமர்த்தி உள்ளோம். இவர்கள் இங்கு தங்கி வேலை செய்வதால் எங்களுக்கு குறித்த நேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு உணவு தயார் செய்து



**"வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு என்று பெருமிதப்பட்டுக் கொள்வதில் தவறில்லை.**

**ஆனால் இதில் தமிழகத்தின் தொழில், அரசியல், சமூக நீதி கட்டமைப்புகளை காலப் போக்கில் பதம் பார்க்கும் ஆபத்து இருக்க வாய்ப்பு உள்ளது".**

கொடுக்க முடிகிறது. அதேபோல் இரவில் கூடுதல் நேரம் ஓட்டல் இயக்க ஏதுவாகவும் இருக்கிறார்கள். மற்ற தொழிலாளர்களுடன் ஒப்பிடும் போது கூலி சற்று குறைவாக இருப்பதால் வியாபாரம் குறையும் நாட்களில் சமாளிக்க முடிகிறது.

இது ஒருபுறம் இருக்க ரெயில்வே, வங்கிகள், தபால் துறை, தொலை தொடர்புத்துறை (பி.எஸ்.என்.எல்.) என அனைத்து மத்திய அரசு துறைகளிலும் வடமாநிலத்தவர்கள் ஆதிக்கமே அதிக அளவில் இருக்கிறது. வங்கிகளில் வடமாநிலத்தவர்களின் ஆதிக்கம் குறித்து பெயர் சொல்ல விரும்பாத வங்கி ஊழியர் ஒருவர் கூறியதாவது: கடந்த ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு கள்ளக்குறிச்சி பகுதியில் வங்கி மேலாளர் முதல் அலுவலக உதவியாளர் வரை அனைவரும் இந்திக்காரர்கள் பணியாற்றியதால், சரியாக தொடர்பு கொள்ள முடியாமல் பொதுமக்களே அந்த வங்கியை பூட்டி சீல் வைத்த சம்பவம் நடந்து உள்ளது. வட மாநிலங்களில் உள்ள வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களில் வங்கி தேர்வுகளுக்கான கேள்வித்தாள்களை அவர்களே தயாரிப்பதாக ஒரு தகவல் உள்ளது.

மேலும் அவர்களின் தாய்மொழியான இந்தியில் தேர்வு எழுதும் வாய்ப்பும் உள்ளதால், வங்கி துணை அதிகாரிகள் பணிகளில் வடமாநிலத்தவர்கள் அதிக அளவில் தேர்வாகின்றனர். இவ்வாறு தேர்வாகி வரும் வடமாநிலத்தவர்களுக்கு வங்கிகள் குறித்த புலமையும், ஆங்கில புலமையும் குறைவாகவே இருக்கும். இதனால் தமிழக வங்கி பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மேலும், வங்கிகளின் தலைவர்கள், செயல் இயக்குனர்கள் உள்ளிட்ட உயர் பதவிகளில் வடமாநிலத்தவர்களே இருப்பதால் பதவி உயர்விலும் தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வடமாநிலத்தவர்கள் வங்கி தேர்வில் தேர்ச்சி பெற்றாலும், தமிழ் மொழி தெரியாதவர்கள் தமிழ்நாட்டில் வேலை பார்க்க முடியாது என்று ஒரு சட்டம் இருக்கிறது.

ஆனால், வங்கி ஊழியர்கள் சங்க நிர்வாகிகளின் குளறுபடிகளால் இது போன்று தமிழ் தெரியாத வடமாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் வேலை பார்க்கின்றனர்.

தமிழர்கள் நியாயமான கூலி கேட்கும் விழிப்புணர்வை அடைந்திருக்கின்றனர். வட மாநிலத்தவர்கள், தங்கள் சொந்த மாநிலங்களில் வாழ்வாதாரம் இன்மையால், குறைவான ஊதியமே போதுமானதாக இருப்பதாக கருதுகின்றனர். உண்மையில், அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஊதியத்தைவிட குறைவான சம்பளமே வெளி மாநில தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஒருநாளைக்கு 12 மணிநேரம் கடந்தும் அவர்கள் வேலை செய்கின்றனர். புலம்பெயர் தொழிலாளர்கள் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் அவர்களை பதிவு செய்ய வேண்டும். அது முறையாக நடைபெறுவதில்லை. புலம்பெயர் தொழிலாளர்கள் எத்தனை பேர் வேலை செய்கின்றனர் என்பதை ஒவ்வொரு நிறுவனமும் பதிவு செய்ய வேண்டும். அதனை நிறுவனங்கள் செய்வதில்லை.

வட இந்தியர்களின் வருகையால் தமிழத்தில் அடித்தட்டு மக்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்படுவதாக ஆரம்பம் முதலே குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. குறைந்த ஊதியத்தில் இவர்களை பணியமர்த்த முடியும் என்பதால் இங்குள்ள முதலாளிகள் வட இந்தியர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர்.

எனவே தமிழக அரசு இந்த விவகாரத்தை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். எத்தனை கோடி பேர் இங்கே வந்துள்ளனர். அவர்களுக்கான உரிமைகள் என்னென்ன என்பது குறித்து தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும். கட்டுப்பாடுகளை அமல்படுத்த வேண்டும். இல்லையேல் தமிழக அரசியல் வரலாறும், பேணிக்காத்த சமூக நீதியும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்து.

– **ஆசிரியர்**

# மாணவர்களுக்கு தோல்வியை தாங்கும் பக்குவம் இருக்கின்றதா?


பரீட்சை மாணவர்களுக்கு தேவையற்ற மனஉளைச்சலை ஏற்படுத்த காரணங்களில் ஒன்று இப்பரீட்சை பெற்றோர்களின் பரீட்சையாக மாறி விட்டமையேயாகும். வசதி படைத்த பெற்றோர் தமது பிள்ளைகளை இரவு பகல் பாராமல் பல ஆயிரம் செலவு செய்து வகுப்புகளுக்கு அனுப்பி அறிவைத் திணித்து பரீட்சையில் சித்தியடையச் செய்ய வைக்கின்றனர். இப்பிள்ளைகளுக்கு உபகாரநிதி (Gratuity Fund) கிடைப்பதில்லை. ஆனால் பிரபல பள்ளிகளில் அனுமதி மட்டும் கிடைகின்றது.

இதன்மறுபக்கத்தில் திறமைமிக்க வசதி குறைந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றில் எங்கு மனஉளைச்சல் தோன்றுகிறது என்றால் பெற்றோர் இதனை மிகப்பெரிய போட்டியாகவும் மற்றும் ஆளுமையைக் காட்டும் பரீட்சையாகவும் கருதி கொண்டாடும் போதுதான். இந்தப் பரீட்சையில் தோல்வியுற்ற பிள்ளைகள் அடுத்தகட்ட வெற்றியாளர்கள் என்ற மனப்பதிவை பெற்றோர் தமது பிள்ளைகளிடத்தில் பதியத் தவறிவிடுகின்றனர். அதுமட்டுமன்றி வெற்றி பெற்ற பிள்ளைகளை மாத்திரம் கொண்டாடி வாழ்த்துவதாலும் மற்றைய பிள்ளைகள் மனஉளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

ஒரு ஓட்டப்போட்டியை எடுத்தாலும் 1ம் 2ம் 3ம் இடங்களைப் பெற்றவர்கள் தவிர்த்து ஏனையவர்கள் தோல்வியை ஏற்றுக் கொண்டு பின்னொருநாளில் வெற்றிக்காக முயற்சிக்கின்றனர். அவர்களை நாம் எவ்வாறு தேற்றுவோம், ஆறுதல்படுத்துவோம் மற்றுமொரு போட்டிக்கு தயார் படுத்துவோமென்ற செயற்பாட்டை இங்கு மறந்து விடுகிறோம். இன்றைய தோல்வியே உனது எதிர்காலத்துக்கான வெற்றிப்பாதை என்பதை மாணவர்கள் அனைவரிடத்திலும் சிறிய வய திலிருந்தே விதைக்கப்படவேண்டும்.

அதே போல் வெற்றி பெற்றவர்களும் தாங்களது இடத்தை தக்கவைக்க எப்போதும் முயற்சிக்க வேண்டும் எனும் விடயங்களை ஆழ உழுது விதைக்கத் தவறிய சந்தர்ப்பங்களே இவர்கள் குறிப்பிடும் மனஉளைச்சல்.

அதேபோல வெற்றி பெற்றவர்களுக்கான




பாராட்டு விழாவை செய்வதுடன் நின்றுவிடாது, அனைத்து மாணவர்களையும் கௌரவித்துப் பாருங்கள்! மேடைக்கு கீழ் அமர்ந்துள்ள பின்தங்கிய மாணவர்களை மேடையேற்றி அழகுபடுத்துங்கள். அந்த மாணவர்களை முன்னிலைப்படுத்தி நிகழ்ச்சித் தொகுப்பு அனைத்தையும் வடிவமைத்து அந்த மேடையில் அவர்களையும் கௌரவியுங்கள்.

நளைய உலகில் அவர்கள்தான் விழுந்தவனைத் தூக்கிவிடும் நல்ல குடிமகனாக வாழ்வர். இதேநேரம் சில சமூக ஆர்வலர்களால் இப்பரீட்சையானது அதிக அழுத்தம் மிக்க பரீட்சையாக சித்திரிக்கப்படுகின்றது.

பாடசாலை ஆரம்பக்கல்வியை பொறுத்தவரை 3ம் தரத்திலிருந்தே இப்போது Scholarship பரீட்சை வழிகாட்டுதல்கள் நடைபெறுகின்றன. வெற்றி தோல்வி குறித்து அவர்களை முன்கூட்டியே உளரீதியாக தயார்படுத்துங்கள்.

தமிழகத்தில் நீட் தேர்வு தற்கொலைகள் அவ்வப்போது பெரும் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. ஆனால் இன்னும் 10 மற்றும் 12 வகுப்பு தேர்வு தோல்விகளை கூட தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் மாணவ மாணவிகள் இருப்பது கவலை அளிக்கிறது. அதற்கு வீடு மற்றும் சமூகத்தின் பார்வையால் எழும் அழுத்தமே காரணமாக கூறப்படுகிறது. மராட்டியத்தில் 1834 மாணவர்கள், மத்திய பிரதேசத்தில் 1308 மாணவர்கள் தற்கொலை செய்து உள்ளனர். தமிழகத்தில் 1246 மாணவர்கள் தற்கொலை செய்து உள்ளனர். இந்தியாவில் மொத்தம் 13,089 மாணவர்கள் தற்கொலை செய்து

உள்ளனர். இதில் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் 10,732 பேர். தேர்வில் தோல்வி காரணமாக தற்கொலை செய்தவர்கள் மட்டும் 864 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2020ம் ஆண்டு 12,526 பேர் தற்கொலை செய்து உள்ள னர். இதில் ஆண்கள் 55.62 சதவீதம். பெண்கள் 44.38 சதவீதம். 2021ம் ஆண்டு 13,089 பேர் தற்கொலை செய்து உள்ளனர். இதில் ஆண்கள் 56.51 சதவீதம். பெண்கள் 43.49 சதவீதம் என்று குறிப் பிடப்பட்டு உள்ளது. இதனால் மாணவிகளை விட மாணவர்களே அதிகம் தற்கொலை செய்து கொள்கின்றனர். மதிப்பெண்களை வைத்து ஒருவரின் அறிவை மதிப்பிட முடியாது.

ஆனால் மதிப்பெண்கள் தான் உயர் கல்விக்கும், நல்ல வேலை பெறவும் ஆதாரமாக இருக்கிறது. எனவே நம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். தேர்வில் மதிப்பெண் பெற முடியாத நிலை ஏற்படும் போது குற்ற உணர்ச்சி கொள்ள எந்த அவசியமும் இல்லை. மீண்டும் படித்து தேர்ச்சி பெற முயற்சி செய்ய வேண்டும். இதற்கு மாணவர் ஆசிரியர் இடையே உறவு மேம்பட வேண் டும். பாடம், படிப்பு, தேர்வு என்பதை தாண்டி உலகம் எவ்வளவு அதிசயங்களை உள்ளிடக்கியது என்பதை ஆசிரியர்கள் மாணவர் களுக்கு புரிய வைக்க வேண்டும் ஆசிரியர்கள், மாணவர்களை சமூகத்தில் தைரியமாக வாழத் தகுதி உடையவர்களாக உருவாக்க வேண்டும். அதற்கான வழிகாட்டுதல்களை தொடர்ந்து வழங்க வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரி தேர்வுகளில் தோல்வி அடைவது என்பது கவனக்குறைவால் ஏற்படும் சிறு சறுக்கல், தடுமாற்றம் தான் என்பதை மாணவர்கள், இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தவறுகள், தோல்விகள், இழப்புகள், பலவீனங்களில் இருந்து மீண்டும் வர முடியும். படிப்பு, தேர்வு உள்பட எந்த தோல்வியும் வாழ்க்கையை விட மேலானது, உயர்ந்தது அல்ல. எத்தனை தோல்வி அடைந்தாலும் வாழ்ந்து காட்ட வேண்டும். அது தான் ஒரு பிறப்பின் அர்த்தத்தை சமூகத்துக்கு விளக்கும் சான்றாக இருக்க முடியும்.

எந்தவொரு விஷயத்திலும் நன்மையும் தீமையும் உண்டு. எப்போதும் நல்லவற்றை எடுத்துக் கொண்டு முன்னேறும் வழிவகைகளைக் காட்டிக் கொடுங்கள். அதுவே மாணவர்களுக்கு உளப்பக்குவத்தை அளிக்கும்.

– K. **சுப்பு லட்சுமி**

# வரையாட்டின் கொம்பை பிடித்து துன்புறுத்தி ஃபோட்டோ எடுத்த 2 இளைஞர்கள் கைது



கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதிக்கு உட்பட்ட டாப்ஸ்லிப் மற்றும் வால்பாறை பகுதிகளை சுற்றி பார்க்க அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம். பொள்ளாச்சியில் இருந்து வால்பாறை செல்லும் சாலை சுமார் 40 கொண்டை ஊசி வளைவுகளை கொண்ட வனப்பகுதியில் அமைந்துள்ளது.

இந்த வனப்பகுதியில் யானை, கரடி, சிறுத்தை, புலி, மான் மற்றும் நமது மாநில விலங்கான வரையாடு இங்கு உள்ளது. அரிய வகை வனவிலங்குகள் பட்டியலில் இருக்கும் வரையாட்டினை கூடுதல் கவனத்துடன் வனத்துறையினர் கண்காணித்து வருகின்றனர். வன விலங்குகள் அவ்வப்போது காட்டுப்பகுதியை விட்டு வெளியேறி சாலையில் சுற்றித் திரிவது வழக்கம்

இந்நிலையில் பொள்ளாச்சி வனச்சரதிற் குட்பட்ட வால்பாறை சாலையில் நின்று கொண்டிருந்த தமிழகத்தின் மாநில விலங்கான வரையாட்டின் கொம்புகளை பிடித்து 2 பேர் கொடுமைப்படுத்தினர். மேலும் அதை புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களிலும் வெளியிட்டனர். இளைஞர்களின் செயலுக்கு விலங்குகள் நல ஆர்வலர்கள் பலர் கண்டனம் தெரிவித்த நிலையில் அந்த இளைஞர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

– A.ஐயப்பன்



# இந்தியா வளர்ந்த நாடாக உருவெடுக்குமா?

இந்தியாவின் 75வது சுதந்திர தினத்திலும் உலக நாடுகள் வியந்து பார்க்கும் அடிப்படை பண்புகள் ஜனநாயகம், சமூக நல்லிணக்கம், வளம் இந்த மூன்றும்தான். நம்மைப் போன்று காலனிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்ற பல நாடுகள் இன்று ஜனநாயகத்தை தக்கவைக்க முடியாமல் தள்ளாட்டத்தில் உள்ளன. நமது அண்டை நாடான பாகிஸ்தானே இதற்கு உதாரணம். இன்றும் ராணுவ கட்டுப்பாட்டில் உள்ள நாடாகவே அறியப்பட்டு வருகிறது பாகிஸ்தான். ஆனால் இந்தியா அதற்கு நேரெதிர் மாறாக உள்ளது.

மக்களாட்சி தத்துவத்துக்கு மிகச் சிறந்த உதாரணமாக போற்றப்படுவது இந்திய ஜனநாயகம் மட்டும்தான். பிரெஞ்சு நாவலாசிரியர் ஆன்ட்ரே மால்ரக்ஸ் கூறுவதைப் போல "அப்பழுக்கற்ற நமது விடுதலைப் போராட்ட வீரர், புனிதர்களால் இந்தியா வடிவமைக்கப்பட்டதால்தான் இந்தப் பெருமை. எகிப்தின் எதிர்காலத்தை இந்தியாவின் தற்போதைய மாதிரியைக் கொண்டு உருவாக்குவது குறித்து பேசுவதற்காக அரபு எழுச்சி இயக்கம் அழைத்தபோது அவர்கள் கேட்ட மூன்று கேள்விகள் இவைதான். ஒன்று எப்படி இந்திய ஜனநாயகம் ராணுவத்தின் பிடியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளது. இரண்டு உலக அரங்கில் வேகமாக வளரும் பொருளாதாரத்தை எப்படி இந்தியா தக்கவைத்துள்ளது. பல இனங்கள், மதங்கள் வாழும் இந்தியாவில் சமூக நல்லிணக்கத்தை பேணிக்காப்பது எப்படி என்பதே மூன்றாவது கேள்வி.

இஸ்லாமிய மக்களை கணிசமான அளவில் கொண்டுள்ள இந்தியா அவர்களை சிறந்த முறையில் பேணிக்காத்து வருவது எப்படி என்பதை அறிந்து கொள்வதற்காகவே அவர்கள் இந்த கேள்வியை எழுப்பினர். இதற்கு தொடக்கத்தில் சொல்லிய மூன்று பண்புகள்தான் பதில். சுதந்திரத்தின் தொடக்கத்தில் சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொருளாதாரசீரமைப்பு நடவடிக்கைகள், 1991-க்குப் பிறகு உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கலை நோக்கி வேகமாக நகரத் தொடங்கியது. அடுத்தடுத்து வந்த அரசுகள் கொண்டு வந்த திட்டங்களின் விளைவு, நடுத்தர வர்க்கத்தினரிடையே வேகமாக வளர்ச்சியை தூண்டியதுடன், 50 கோடி பேரை வறுமையின் பிடியிலிருந்து மீட்டெடுத்துள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களின் வளர்ச்சி வேகம் அடுத்து வரும் 25 ஆண்டுகளுக்கும் தொடருமானால் இந்தியா 100வது ஆண்டு சுதந்திர தினத்தில் அடியெடுத்து வைக்கும்போது பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டிருக்கும் என்பது அசைக்க முடியா நம்பிக்கை. பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைளின் வேகம் மிதமான அளவில் இருந்தும்கூட உலக அளவில் வேகமாக வளரும் நாடாக இந்தியாவை மாற்ற உதவியுள்ளது கட்டுரையின் தொடக்கத்தில் சொன்ன அந்த மூன்று அடிப்படை பண்புகள்தான். தனிநபர் தவறு செய்தால் அது அவரது குடும்பத்தை மட்டுமே பாதிக்கும். ஆட்சியாளர்கள் தவறு செய்வார்களேயானால் அது ஒட்டுமொத்த தேசத்துக்கும் மிகப் பெரும் சோகமான முடிவையேதரும். 1991க்கு முன் தவறவிட்ட வாய்ப்புகளில் இந்தியா 2 தலைமுறைகளை தியாகம் செய்துள்ளதை நாம் வசதியாக மறந்து விடுகிறோம்.

தற்போது நாம் வேகமாக வளரும் பொருளாதாரமாக உருவெடுத்துள்ளதற்கு தகவல் தொழில்நுட்பத் துறையின் (ஐடி) பங்கு மிக முக்கியமானது. அரேபியர்கள் இந்திய ஐடி துறையின் வளர்ச்சியை பிரமிப்பாக பார்க்கின்றனர். இந்த வளர்ச்சிக்கு இரண்டு காரணங்கள்தான் அடிப்படை. இதர பொருள்களைப் போல் அல்லாமல் மென்பொருள்சேவை என்பது நேரடியாக வாடிக்கையாளரின் கனிணியை சென்றடைவது. இதனால், அரசின் உரிம நடைமுறை கட்டுப்பாடுகள் அதற்கு கிடையாது. இரண்டாவது நாஸ்காம் அமைப்புக்கும் சில அரசு அதிகாரிகளுக்கும் இடையே காணப்படும் ஒத்துழைப்பு. எகிப்தியர்களில் 12% பேர் கிறிஸ்தவர்கள். இருப்பினும், அவர்களால் அங்கு பாதுகாப்பான சூழலை உணர முடியவில்லை. ஆனால், இந்தியர்களில் 13% பேர் இஸ்லாமியர்களாக இருந்தாலும் அவர்கள் இங்கு இருப்பதை பாதுகாப்பாக உணர்கிறார்கள். அது எப்படி என்பது எகிப்தியர்களுக்கு புரியாத புதிராக உள்ளது. அதற்கான பதில் அந்த பாதுகாப்பான உணர்வுதான் இந்தியாவை ஸ்திரத்தன்மையுடன் வைத்துள்ளது. முதலீடு, வேலைவாய்ப்பு, வளம் கொழிப்பதும் அதனால்தான்.

ஆனால் தற்போதைய சூழல் அந்த நம்பிக்கையை வலுவிழக்கச் செய்யும் வகையில் உள்ளது. இந்தியாவில் இஸ்லாமியர்களில் சராசரியான பேர் பாதுகாப்பான சூழலில் இருப்பதாக உணரவில்லை.

சிறுபான்மையினருக்கான உரிமைகளை நிலை நாட்டி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலமாகவே தேசத்தின் பாதுகாப்பை வலுப்படுத்த முடியும். இந்திய சுதந்திரத்தின் 75 வது அமுதப் பெருவிழா கொண்டாட்டத்தை பெருமையுடன் நினைவுகூர்வதற்கு ஏராளமான சாதனைகள் உள்ளன. மனிதர்களின் சராசரி ஆயுள்காலம் 32லிருந்து 70 ஆண்டாக அதிகரித்துள்ளது; கல்வியறிவு 12%லிருந்து 78%ஆக மேம்பட்டுள்ளது; ஏழ்மை நிலை 70%லிருந்து 21 ஆக குறைந்துள்ளது; 90% மக்கள் மின்சார வசதியை பெற்றுள்ளது என சாதனை பட்டியல் நீளும்.

இந்த வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து நாம் வீறு நடைபோட முடியும். மற்ற நாடுகளைப் போல நிச்சயமற்ற தன்மை இங்கு காணப்படவில்லை. இந்தியாவின் வளர்ச்சி நிலையானதாகவும், கணிக்கக்கூடிய வகையிலும் அமைந்துள்ளது அதற்கு சான்று. அந்நிய முதலீடுகள் தொடர்ச்சியாக குவிந்து வருகின்றன. வரும் ஆண்டுகளில் உலக வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்று சர்வதேச பொருளியல் வல்லுநர்கள் போட்டி போட்டு கணிக்கின்றனர்.

**வரும் ஆண்டுகளில் உலக வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்று சர்வதேச பொருளியல் வல்லுநர்கள் போட்டி போட்டு கணிக்கின்றனர்.**

இந்த பெருமிதமெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், கல்வி, சுகாதாரம் என்ற மற்றொரு பக்கத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள தோல்வியை திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இந்த தோல்வி, நிதி பற்றாக்குறையால் உருவானதல்ல, நிர்வாகத் திறமையின்மையால் ஏற்பட்டவை. தன்னார்வ அமைப்புகளின் புள்ளிவிவரங்களின்படி, அரசு தொடக்கப் பள்ளிகளில் 4 ஆசிரியர்களில் ஒருவர்பணிக்கே வருவதில்லை. ஆசிரியர் தகுதித் தேர்வில் 10% குறைவான ஆசிரியர்களே தேர்ச்சி பெறுகின்றனர். மேற்குவங்கத்தில் பார்த்தா சட்டர்ஜியின் சமீபத்திய ஊழலே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இதேபோன்ற மோசமான சூழ்நிலையைத்தான் அரசு ஆரம்ப சுகாதார மைய புள்ளிவிவரங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

இதர கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது வளர்ச்சியில் சராசரிமாநிலமாக இருந்தாலும் அம்மக்களின் கடின உழைப்பு, புத்திக் கூர்மை மட்டுமே இந்தியாவை அடிமட்டத்திலிருந்து மேலெழுந்து உச்சம் தொட உதவியுள்ளது.

– நா வீ சிவசங்கர்

# அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்க வேண்டும்:

## அமைச்சர் உதயநிதி

"அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்க வேண்டும்" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 19.12.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்ததில் ஆய்வு மேற்கொண்டார்.




இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகள், சுழல் நிதி, இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள் குறித்தும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் இல்லம் தேடி கல்வி ஆகிய திட்டங்களில் சுய உதவிக் குழு மகளிரின் பங்களிப்பு மற்றும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும். மேலும் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் நிலை குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அரசின் திட்டங்கள் முழுவதும் மாநிலத்தின் கடைக்கோடியில் உள்ள கிராமத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்களையும் சென்றடையும் வண்ணம் செயல்பட வேண்டும். சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக ரூ.25,000 கோடி வழங்கப்பட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விரைந்து அடைந்திட வேண்டும். தர மதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரும் நடவடிக்கைகளில் அடைந்துள்ள இலக்குகளை விரைந்து அடைந்திட வேண்டும்.

சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நடவடிக்கையில் மேலும் சிறப்பாக செயல்பட வேண்டும். திட்டத்தின் செயல்பாடுகளை சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடித்திட அலுவலர்கள் அடிக்கடி ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இலக்கு மக்கள், நலிவுற்றோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர் ஆகியோர்களை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்களை அமைத்திட அதிக அக்கறை காட்டிட வேண்டும். வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தரும் நடவடிக்கையில் அதிக முனைப்புடன் செயல்பட வேண்டும்" என்று அவர் பேசினார்.

– M. திலிப் குமார்

சிறுகதை

# பயம் கண்ணை மறைத்துவிடும்!



ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்துவிட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார்.

அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான்.

அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை.

நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய்.

யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய்.

உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது.

அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

– K. **கலைமணி**

# பொருளாதார நெருக்கடியில் தவிக்கிறதா பாகிஸ்தான்?

பாகிஸ்தான் தொடர்பான பல வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. பெரும்பாலான வீடியோக்களில் மக்கள் கோதுமை மாவு மற்றும் ரொட்டிக்காக ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறார்கள். பாகிஸ்தானின் பொருளாதார அவல நிலை மற்றும் விலைவாசி உயர்வின் அளவைக் காட்ட இந்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன. வீடியோவில் சில நிபுணர்களின் கருத்துகளும் வைரலாகி வருகின்றன. இதேபோன்ற கருத்தை அமெரிக்காவின் டெலாவேர் பல்கலைக்கழக பேராசிரியர் முக்தர் கானும் கூறியுள்ளார். பேராசிரியர் முக்தர் கான் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு அமெரிக்க குடிமகன்.

“இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அதிகார சமநிலையின்மை பாகிஸ்தானுக்கு சாதகமாக இருந்திருந்தால், நீங்கள் காஷ்மீருக்காக இந்தியாவை தாக்கியிருப்பீர்கள்” என்று முக்தர் கான் ஒரு பாகிஸ்தான் பத்திரிக்கையாளரிடம் கூறினார்.

“அமெரிக்கா பாகிஸ்தானுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்துவிட்டது. இப்போது அமெரிக்காவின் ஆர்வம் பாகிஸ்தான் மீது இல்லை. அமெரிக்கா பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இனி பாகிஸ்தானை அது நம்ப முடியாது. இந்த ஆண்டு பாகிஸ்தான் இரண்டு போர்களை சந்திக்க வேண்டும். ஒன்று TTP (தெஹ்ரீக் இ தாலிபன் பாகிஸ்தான்) உடன் போராட வேண்டும். TTP இன் புதிய வரைபடத்தை பார்த்தால், அதில் PoK உள்ளது. தற்போது பாகிஸ்தான் சிக்கலில் உள்ளது. ஆனால் இந்தியா அதை மேலும் சிக்கலில் ஆழ்த்த முயற்சிக்கவில்லை,” என்று பாகிஸ்தான் பத்திரிகையாளர் ஃபக்ர் யூசுப்சாயிடம் முக்தர் கான் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் தனது பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கடன் மற்றும் சில உதவிகளைப் பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது. வெள்ளப் பெருக்கு சிக்கலில் இருந்து மீள்வதற்கு 9 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான உதவி, திங்களன்று சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடந்த நன்கொடையாளர்கள் மாநாட்டில் பாகிஸ்தானுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் கருவூலம் வேகமாக காலியாகி வரும் நிலையில், இந்த செய்தி பாகிஸ்தானுக்கு பெரும் நிம்மதியை அளித்துள்ளது. பாகிஸ்தானிடம் சுமார் நாலரை பில்லியன் டாலர்கள் அந்நிய செலாவணி கையிருப்பே மீதமுள்ளது. அது சில வாரங்களின் இறக்குமதி செலவுக்கு மட்டுமே போதுமானது. இது தவிர பாகிஸ்தானுக்கு பல கடன்களை திருப்பிச்செலுத்தும் பொறுப்புகளும் உள்ளன. ஜெனீவா மாநாட்டில் 9 பில்லியன் டாலர் திரட்டியதை ஹாபாஸ் ஷெரீப் அரசு தனது சாதனையாக காட்டி வருகிறது.

முன்னதாக செவ்வாயன்று பாகிஸ்தானின் பழைய கடன் மற்றும் முதலீட்டை அதிகரிப்பது குறித்து பரிசீலித்து வருவதாக சௌதி அரேபியா தெரிவித்தது. சௌதி அரேபியா பாகிஸ்தானுக்கு வழங்கிய பழைய மூன்று பில்லியன் டாலர் கடனை ஐந்து பில்லியன் டாலராக உயர்த்துவதோடு கூடவே முதலீட்டை அதிகரிப்பது பற்றியும் பேசியுள்ளது. இது தவிர அடுத்த மூன்று ஆண்டுகளில் உலகின் பிற அமைப்புகளிடமிருந்து 8.7 பில்லியன் டாலர்களை பாகிஸ்தானுக்கு தருவதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை கடனாகப் பெறப்படுமா அல்லது மானியமாக கொடுக்கப்படுமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

ஜெனீவாவில் பாகிஸ்தானின் காலநிலை குறித்த ஒரு சர்வதேச மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டை ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்திருந்தது. பாகிஸ்தானில் கடந்த ஆண்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு லட்சக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குமாறு இந்த மாநாட்டில் ஐ.நா. வேண்டுகோள் விடுத்தது. ஐ.நா மற்றும் பாகிஸ்தானின் முறையீட்டின் பேரில் பல அரசுகள், அமைப்புகள் மற்றும் மக்கள், 9 பில்லியன் டாலர்களுக்கு மேல் உதவிக்கான உத்தரவாதத்தை அளித்துள்ளனர்.

"ஜெனீவா மாநாட்டில் பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ 9 பில்லியன் டாலர்களை திரட்டுவதில் வெற்றி கிடைத்துள்ளது. இதற்காக சர்வதேச சமூகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்,”என்று





ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்டோனியோ குட்ரெஸ் ட்வீட் செய்துள்ளார். பாகிஸ்தானின் முன்னணி ஆங்கில நாளேடான 'டான்' சமீபத்திய நிகழ்வுகள் குறித்து ஜனவரி 11 ஆம் தேதி ஒரு தலையங்கம் எழுதியுள்ளது. டான் தனது தலையங்கக் குறிப்பில், "இங்குள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைத்துவிட்டது போல அரசு அதிகாரிகள் பெருமிதம் கொள்கிறார்கள். இதனால் பாகிஸ்தானின் டாலர் தட்டுப்பாடு முடிவுக்கு வரப்போவதில்லை என்பதே உண்மை," என்று எழுதியுள்ளது.

பாகிஸ்தானின் மத்திய வங்கியான எஸ்பி பியில் அந்நியச் செலாவணி கையிருப்பு 4.5 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது. இந்த தொகை நான்கு வாரங்களுக்கும் குறைவான இறக்குமதி செலவை சமாளிக்க மட்டுமே போதுமானது. பாகிஸ்தானுக்கு அவசரமாக டாலர் தேவைப்படுகிறது. சர்வதேச செலாவணி நிதியத்துடனான பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் இறுதி செய்யாத வரை, ஜெனீவா மாநாடு மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து உதவி கிடைப்பது கடினம்.

"ஐஎம்எஃப் ஒப்பந்தத்திற்காக பொருளாதார சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்படக்கூடாது என்று பிரதமர் விரும்புகிறார். இந்த சீர்திருத்தங்கள் ஒற்றை சந்தை அடிப்படையிலான மாற்று விகிதம், மின் கட்டணம் மற்றும் எரிவாயு விலை அதிகரிப்பு மற்றும் வரி அதிகரிப்பு. மிவிதி நிதி மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில உறுதியான உதவிகளை வழங்க பாகிஸ்தான் விரும்புகிறது. பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ள நெருக்கடி இந்தக் கடன்கள், உதவிகள் மூலம் உறுதிமொழிகள் மூலம் தீர்க்கப்படும் என்று தோன்றவில்லை," என்று டான் எழுதியுள்ளது.

"ஜெனீவா மாநாட்டில் எட்டு பில்லியன் டாலர்களை திரட்ட ஷாபாஸ் ஷெரீப் இலக்கு

நிர்ணயித்திருந்தார். ஆனால் அதை விட அதிகமாக தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது பிரச்னைக்கு தீர்வல்ல. பாகிஸ்தான் நீண்ட கால பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்," என்றும் டான் நாளேட்டின் தலையங்கம் கூறுகிறது.

ஜெனீவா மாநாடு, சௌதி அரேபியா மற்றும் பிற அமைப்புகள் உறுதி கூறியுள்ள உதவி குறித்து பாகிஸ்தானிய சமூக ஊடகங்கள் விவாதித்து வருகின்றன.

பாகிஸ்தானின் பொருளாதார கட்டுரையாளர் ஃபாரூக் சலீம், கபரியா சேனல் பப்ளிக் நியூஸின் விவாத நிகழ்ச்சியில், "பாகிஸ்தானிடம் நாலரை பில்லியன் டாலர்கள் உள்ளது. அது 20 நாட்களுக்கு மேல் நீடிக்காது. இது மிகவும் ஆபத்தான நிலை. பாகிஸ்தானை யாரேனும் காப்பாற்ற முடியும் என்றால் அது சர்வதேச நாணய நிதியம் தான் என்று நான் நினைக்கிறேன். சௌதி அரேபியாவிலிருந்து பணம் வருவதில் தாமதம் ஏற்படலாம்," என்று கூறியுள்ளார். ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான பாகிஸ்தான் ருபாயின் மதிப்பு 240 ரூபாய். எரிபொருளில் இருந்து உணவு பொருட்கள் வரை எல்லா பொருட்களின் விலையும் வானத்தை தொடும் அளவிற்கு உயர்ந்து வருகிறது.

பாகிஸ்தானில் வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 240 ரூபாயாக உள்ளது. எரிசக்தி பயன்பாட்டைக் குறைக்க, சந்தைகள், மால்கள் மற்றும் திருமண மண்டபங்களை முன்கூட்டியே மூட பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

சந்தைகள் மற்றும் வணிக வளாகங்களை இரவு 8.30 மணிக்குள் மூட வேண்டும் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா முகமது ஆசிப் கடந்த வாரம் கூறியிருந்தார். அதேநேரம் இரவு 10 மணிக்குள் திருமண மண்டபங்கள் மூடப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆறாயிரம் கோடி ரூபாயை சேமிக்க முடியும் என்கிறார் குவாஜா ஆசிப்.

பாகிஸ்தானில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு டாலர்கள் கடத்தப்படுவதாகவும், இதனால் பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து வருவதாகவும் வெளிநாட்டு நாணய டீலர் ஒருவர் கூறுகிறார்.

1965 ஆம் ஆண்டில், ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஆப்கான் கடப்பு வர்த்தக ஒப்பந்தம் கைெயழுத்தானது. இதன் கீழ் பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை ஆப்கானிஸ்தான் பயன்படுத்திக்கொள்கிறது.

– B. மணிகண்டன்

# STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY

## FORM IV ( See Rule 8)

| | |
|---|---|
| 1. Place of publication | : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 2. Periodicity | : **Monthly** |
| 3. Printer Name | : **NV SIVASHANKAR** |
| (a) Whether Citizen of India | : **Yes** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : **J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** |
| 4. Publisher Name | : **NV SIVASHANKAR** |
| (a) Whether Citizen of India | : **Yes** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 5. Editor Name | : **RATHIKA S** |

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

**Dated: 10.01.2023**

**NV SIVASHANAKR**
**Publisher**

# சென்னையில் நடைபெற்ற

## யானை பொங்கல் விழா



சென்னை, பெசண்ட் நகர் எட்வர்டு எலியாட்ஸ் கடற்கறையில் 13.01.2023 அன்று தமிழர்களின் பொங்கல் விழாவில் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதுபோல், வன விலங்குகளை பாதுகாத்தல் மற்றும் அந்நிய களைச் செடிகளை அழித்தல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, வனத்துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யானைப் பொங்கல் விழா, அந்நிய களைத் தாவரங்களால் உருவாக்கப்பட்ட யானைகள் கண்காட்சியை வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டின் வனப் பரப்பை அதிகரிப்பதுடன், வன விலங்குகள் பாதுகாப்பு மற்றும் அந்நிய களைத்தாவரங்களை அழிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வனத்துறை சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக வனங்களை பாதுகாக்கவும், வன விலங்குகள் மற்றும் பறவைகள் பாதுகாப்பிற்காக குறிப்பாக அழிந்து வரும் பறவைகள் மற்றும் வன விலங்குகளை பாதுகாக்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

வன உயிரினங்கள் பாதுகாப்பில், குறிப்பாக அழிந்து வரும் வன உயிரினங்களை பாதுகாப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு அரசு பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அவற்றுள் சிறப்புக்குரியவை;

- பாக் வளைகுடாவில் இந்தியாவின் முதல் கடல் பசு பாதுகாப்பகம்
- விழுப்புரம் மாவட்டத்தில் கழுவேலி பறவைகள் சரணாலயம்
- அகத்தியர் மலை யானைகள் பாதுகாப்பகம்
- திருப்பூர் நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம்
- தென் காவிரி வனவிலங்கு சரணாலயம்
- ரூ.25.14 கோடி மதிப்பில் நீலகிரி வரையாடு இனம் பாதுகாப்புத்திட்டம்
- ரூ.300 கோடியில் செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் நவீன தொழில் நுட்பத்தில் தாவரவியல் பூங்கா

மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட இந்த புதுமையான முயற்சிகள் வன உயிரினப் பாதுகாப்பு நடவடிக்கைகளில், தமிழ்நாட்டுக்கு ஒரு உன்னத இடத்தை அளித்துள்ளது.

கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், 11,806 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள வனப்பகுதிகள், தேவாங்குகளின் முக்கிய வாழ்விடங்களாக “கடவூர் தேவாங்கு சரணாலயம்” அமைத்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை செய்துள்ளது.

இந்தியாவில் பாறு கழுகுகளின் எண்ணிக்கையானது பல காரணங்களால் குறைந்து வந்தாலும், முக்கியமாக கால்நடை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் சில கால்நடை மருந்துகளின் பாதகமான தாக்கத்தினாலும் குறைந்து வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் பாறு கழுகுப் பாதுகாப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 10 பேர் கொண்ட மாநில அளவிலான பாறு கழுகுப் பாதுகாப்புக் குழுவை அமைத்து அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற வனப்பாதுகாப்பு மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட யானைப் பொங்கல் விழா, யானைகளின் அணி வகுப்பு கண்காட்சி 13.01.2023 முதல் 19.01.2023 வரை பொதுமக்கள் பார்வைக்காக கிண்டி தேசிய சிறுவர் பூங்கா மற்றும் சென்னை வன உயிரின மணடலம் சார்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு இ.ஆ.ப., வனத்துறை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்) சுப்ரத் மஹாபத்தர, இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்/ தலைமை செயல் அலுவலர் (கேம்பா) சுதாநாஷீ குப்தா, இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வன உயிரின காப்பாளர்) சீனிவாஸ் ரா ரெட்டி இ.வ.ப., கிண்டி தேசிய சிறுவர் பூங்கா மற்றும் சென்னை வன உயிரின காப்பாளர் ஈ.பிரசாந்த் இ.வ.ப., கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள் மற்றும் மாவட்ட வன அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும், பிரிட்டிஷ் அரசு துணை தூதர் ஆலிவர் பாலாசெட் குடும்பத்தினருடன் கலந்து கொண்டார்.

– R.ஹரிகிருஷ்ணன்

# சினிமா விமர்சனம்

நடிகர்கள்: ஐஸ்வர்யா ராஜேஷ், ஸ்ரீ ரஞ்சனி, ஆடுகளம் நரேன்; இயக்கம்: கின்ஸ்லின்.

ஐஸ்வர்யா ராஜேஷ் இதற்கு முன்பாக நடித்து வெளிவந்த பூமிகா, சுழல் ஆகியவை, நாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களாக இருந்த நிலையில், தற்போது வெளிவந்திருக்கும் டிரைவர் ஜமுனாவும் அதே பாணியில் அமைந்திருக்கிறது. இயக்குநர் கின்ஸ்லின் இதற்கு முன்பாக வத்திக்குச்சி படத்தை இயக்கியவர்.

டிரைவர் ஜமுனா படத்தின் கதை இதுதான்: தனது தந்தை கொலைசெய்யப்பட்ட பிறகு, குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அவர் செய்து வந்த கால் டாக்ஸி ஓட்டுநர் பணியை செய்ய ஆரம்பிக்கிறார் ஜமுனா (ஐஸ்வர்யா ராஜேஷ்).

வீட்டை அடமானம் வைத்து விட்டு ஓடிவிட்ட தம்பி, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட அம்மா (ஸ்ரீரஞ்சனி) என வீட்டில் நெருக்கடியான சூழல். இந்த நிலையில் முன்னாள் எம்எல்ஏவான மரகதவேலை (ஆடுகளம் நரேன்) கொலை செய்யக் கிளம்பும் ஒரு கூலிப்படை, ஜமுனாவின் கால் டாக்சியில் ஏறுகிறது. பின்னர், அந்தக் கூலிப்படையைத் துரத்தி வருகிறது போலீஸ்.

கூலிப்படையின் திட்டம் நிறைவேறியதா, இவர்களுக்கும் நாயகியின் தந்தை கொலைசெய்யப்பட்டதற்கும் என்ன தொடர்பு என்பதுதான் மீதிக் கதை.

**இதுவும் வழக்கமான சினிமாவா?**

"பாத்திரங்களை அறிமுகப்படுத்தவும் அவர்களது நோக்கங்களைச் சொல்லவும் நேரம் எடுத்துக்கொள்கிறார் இயக்குநர் கின்ஸ்லின். படத்தின் மையக் கதாபாத்திரம் ஒரு சிக்கலில் சிக்கிக்கொள்ளும்போது கதை சுவாரஸ்யமானதாக மாறுகிறது. கூலிப்படையினர் ஜமுனாவின் காருக்குள் ஏறும்போது பரபரப்புத் தொற்றிக்கொள்கிறது. ஆனால், அந்த த்ரில் அரைமணி நேரம் கூட நீடிப்பதில்லை என்பதுதான் மிகப் பெரிய ஏமாற்றம்."

"பெரிதாக ஏதோ நடக்குமென எதிர்பார்க்கும்போது, கதை சொல்லும் விதம் பலவீனமடைந்து பாத்திரங்கள் அபத்தமாக நடந்து கொள்ள ஆரம்பிக்கின்றன. உதாரணமாக, ஒரு கூலிப் படை கொலையாளி கதாநாயகியை எளிதில் கொலை செய்திருக்க முடியும் என்ற நிலையில், ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, கொல்லாமல் விடுகிறார். கதையின் முக்கியமான கதாபாத்திரம், படம் நெடுக வர வேண்டுமென்றால், அதற்கான புத்திசாலித்தனமான காட்சிகள் வேண்டும்.

உச்சகட்ட காட்சிகளில் வரும் திருப்பம் சிறப்பாக இருக்கிறது. ஜமுனாவின் பின்னணிக் கதையும் அவர் இந்த வேலையை எடுத்துக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருக்கின்றன.

ஆனால், முக்கியக் கதாபாத்திரங்களோடு ஒன்றச் செய்யும்வகையில் சம்பவங்கள் இல்லை. மேலும் காவல்துறையினர் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதும் தெரியவில்லை. 80களில் வரும் படத்தைப் போல, கதாநாயகி அவர்களை அழித்த பிறகுதான் காவல்துறையே வருகிறது" என்கிறது டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழின் விமர்சனம்.

**சிந்திக்க வைக்கும் கின்ஸ்லினின் இயக்கம்**

டிரைவர் ஜமுனா சிறப்பாகத்தான் துவங்குகிறது. ஆனால், அவர் கொலைகாரர்களிடம் மாட்டிக் கொண்டதும், அந்த சிறப்பான தன்மை முடிந்துவிடு கிறது. அதற்குப் பிறகு வரும் கதையில் ஏகப்பட்ட லாஜிக் கோளாறுகள். கின்ஸ்லின் இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் பல இடங்கள் அதிர வைக்கின்றன. மிகப் பெரிய லாஜிக் ஓட்டைகளையெல்லாம் எப்படி கண்டுகொள்ளாமல் விட்டார்கள் என்று தோன்றுகிறது.

உச்சகட்ட காட்சிகள் படத்தை சற்று காப்பாற்றுகின்றன. படத்தில் வரும் எல்லாக் கதைகளும் ஒரு புள்ளியில் வந்து இணைந்து, ஏற்கத்தக்க ஒரு முடிவைத் தருகின்றன. ஆனால், படத்தோடு உணர்ச்சிகரமான இணைப்பை ஏற்படுத்தும் வகையில் கதை இல்லை. திரைக்கதையில் சற்று கவனம் செலுத்தியிருந்தால், படம் இன்னும் சுவாரஸ்யமாக இருந்திருக்கும்.

"ஒரே கிக்கரில் ஸ்டார்ட் ஆகி புறப்படும் வண்டியைப்போல தொடக்கத்திலிருந்தே விறுவிறுப்பை கூட்ட முயற்சித்திருக்கிறார் இயக்குநர்.

கூலிப்படையினரை ஏற்றிக்கொண்டு ஜமுனா பயணிக்கும் காரில் நிலவும் அமைதியும் அச்சமும் கச்சிதமாக பார்வையாளர்களுக்கு கடத்தப்படுகிறது. அடுத்து என்ன நடக்குமோ என எதிர்நோக்கி காத்திருக்கும் பார்வையாளர்களின் ஆர்வத்தை முடிந்த அளவுக்கு தக்க வைக்கிறது திரைக்கதை.

ஒருவித பயத்துடன் அமைதியாக பயணிக்கும் காரின் இறுக்கத்தை தளர்த்த மற்றொரு கதாபாத்திரத்தை பயன்படுத்தி ஆசுவாசப்படுத்தியது, தனக்கு பின்னால் இருப்பவர்களால் ஆபத்து நேரலாம் என தெரிந்தே பயணிக்கும் ஐஸ்வர்யா ராஜேஷின் உணர்வின் மீட்டரில் பார்வையாளர்களையும் பொருத்தியது என முதல் பாதியில் ஸ்கோர் செய்கிறார் இயக்குநர்.




இரண்டாம் பாதியில் கதையை சொல்லியாக வேண்டிய தேவையின்போது, திரைக்கதை ‘டீசலை’ கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்குகிறது. கதைக்கான காட்சிகளுக்கு பதிலாக காட்சிகளுக்கேற்றவாறு கதையை வளைத்திருக்கும் உணர்வு எழாமலில்லை. காரணம், சுற்றியிருக்கும் காவல் துறையிடமிருந்து குற்றவாளிகள் தப்பிப்பது, வேண்டுமென்றே கொலையாளிக்கு பதிலாக மற்றவரை வெட்டும் கூலிப்படையினர், பிரதான கதாபாத்திரத்தின் எஸ்கேப் என அங்காங்கே தெரியும் தர்க்க ஓட்டைகளில் வெளிச்சம் பளீச்சிடுகிறது.

பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்த வேண்டுமென வைக்கப்பட்ட படத்தின் திருப்பம் பெரிய அளவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாமல் தனித்து தெரிகிறது. திருப்பதை அடிப்படையாக வைத்து எழுப்பப்பட்ட மொத்த திரைக்கதை அதன் இயல்பிலிருந்து விலகி செயற்கைத்தனத்தை தாங்கி நிற்கிறது.

ஒரு கட்டத்தில் ஜமுனா கதாபாத்திரத்தின் அழுத்தமின்மையும், அந்த கதாபாத்திரத்திற்கான போதிய தேவையும் எழாமலிருப்பது படத்துக்கும் பார்வையாளருக்குமிடையே இடைவெளியை ஏற்படுத்திவிட ஒன்ற முடியாமல் போகிறது” என விமர்சித்துள்ளது இந்து தமிழ் திசை.


**ஐஸ்வர்யா ராஜேஷுக்கு பாராட்டு**

ஆனால், பொதுவாக எல்லா விமர்சனங்களுமே ஐஸ்வர்யா ராஜேஷின் நடிப்பையும் பிற நடிகர்களின் நடிப்பையும் வெகுவாகப் பாராட்டியுள்ளன. படத்தைக் காப்பாற்றும் ஒரே அம்சம், ஐஸ்வர்யா ராஜேசும் அவரது அட்டகாசமான நடிப்பும்தான் என்கிறது டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் விமர்சனம். “‘கெத்தாக’ நின்று டீ குடித்து காலி டம்ளரை பார்க்கும் ஐஸ்வர்யா ராஜேஷின் அந்த உடல்மொழி, அப்படியே வலுவிழந்து கூலிப்படையினரிடம் சிக்கி செய்வதறியாமல் திகைக்கும் முகபாவனை, அம்மாவை எண்ணி உருகுவது என தேர்ந்த நடிப்பில் மிளிர்கிறார். கார் ஸ்டண்ட் காட்சிகளில் டூப் போடாமல் நடித்திருக்கும் அவரது மெனக்கெடல் கவனிக்க வைக்கிறது.

விநோத நோயால் பாதிக்கப்பட்டுள்ள நடிகை ஸ்ரீரஞ்சனி கதாபாத்திரத்திற்கு நடிப்பில் நியாயம் சேர்க்கிறார். தவிர, ‘ஆடுகளம்’ நரேன், ஸ்டாண்டப் காமெடியன் அபிஷேக் குமார், இளையபாண்டி ‘பிக்பாஸ்’ பாஸ் மணிகண்டன் தேவையான நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்” என்கிறது இந்து தமிழ் திசை.

எல்லா விமர்சனங்களுமே ‘ஒளிப்பதிவு’ மிகச் சிறப்பாக இருப்பதாகக் கூறுகின்றன.

**– அன்புமணி**






# இந்தியாவை தற்சார்பு நாடாக மாற்ற அறிவியல் சமூகம் பாடுபட வேண்டும்:

## 108 வது அறிவியல் மாநாட்டில் பிரதமர் மோடி

இந்திய அறிவியல் மாநாடு கடந்த 1914 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் நடந்து வருகிறது. இந்த வரிசையில் 108 வது மாநாடு மராட்டிய மாநிலம் நாக்பூரில் உள்ள ஆர்.டி.எம் பல்கலைக்கழக வழக்கத்தில் நேற்று தொடங்கியது. பெண்களுக்கு அதிகாரம் அளித்தலுடன் கூடிய நிலையான வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் என்ற கருப்பொருளில் மாநாடு நடைபெறுகிறது வருகிறது. ஏழாம் தேதி வரை ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் நாடு முழுவதும் இருந்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர். வெளிநாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகளும் பங்கேற்றனர். இந்த நிலையில் தில்லியில் இருந்த படி காணொளி காட்சி மூலம் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

இந்தியா அறிவியல் துறையில் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த அறிவியல் வளர்ச்சியை கொண்டு இந்தியாவை தற்சார்பு நாடாக மாற்ற வேண்டும் என்பதற்காக நமது அறிவியல் சமூகம் பாடுபட வேண்டும். அறிவியல் முயற்சிகள் ஆய்வகங்களில் இருந்து நிலத்திற்கு செல்லவேண்டும். அப்போதுதான் அது உண்மையான பலனைத் தரும். அறிவியல் வளர்ச்சி என்பது இந்தியாவின் தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டிருக்கவேண்டும். குறிப்பாக எரிசக்தி தேவை அதிகமாக உள்ளது. இதற்காக புதிய கண்டுபிடிப்புகள் தேவை. அடுத்து 24 ஆண்டுகள் தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட வேண்டும். அறிவியல் மூலம் நாட்டை தன் நிறைவு கொண்டதாக மாற்றவும் அன்றாட வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வரவும் ஆராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

சிறுதானியங்களின் ஆண்டாக இந்த ஆண்டை ஐ.நா சபை அறிவித்துள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் சிறுதானியங்களையும் அவற்றின் பயன்பாட்டையும் அறிவியலின் துணைகொண்டு மேம்படுத்த வேண்டும். ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் அதிகமாக தொடங்கப்படும் நாடுகளின் பட்டியலில் தற்போது முதல் மூன்று இடத்துக்குள் இந்தியா வந்திருக்கிறது. கண்டுபிடிப்புகள் தொடர்பான பட்டியலில் 2015 ஆம் ஆண்டு வரை இந்தியா 81 வது இடத்தில் இருந்தது. தற்போது அதை நாற்பதாவது இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். உலக மக்கள் தொகையில் 17 முதல் 18 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது. இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான மக்களின் முன்னேற்றம் உலகு எழுச்சிக்கு வடிவமைக்கும். அறிவியல் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்பது மட்டும் எங்கள் சிந்தனை அல்ல. பெண்களின் பங்களிப்பால் அறிவியலை மேம்படுத்த வேண்டும் என்பது முக்கியம். இவ்வாறு அவர் பேசினார்.

– ஆசிரியர்

# வாழையின் மருத்துவ குணங்கள்



மருத்துவப் பயன்மிக்க மூலிகைகளுள் வாழையும் ஒன்று. இதில் மலைவாழை, மொந்தன், பூவன், பேயன், ரஸ்தாலி ஆகியவை முக்கியமானவை.

மலச்சிக்கல், மூலநோயால் அவதியுறுவோருக்கு பூவன் பழமும், வயிற்றுப் புண்ணால் பாதிக்கப்படுவோருக்கு பேயன் பழமும் தேவை. சுலபத்தில் ஜீரணத்தை உண்டாக்கி மலச்சிக்கலைப் போக்குவது மலைவாழை.

ரஸ்தாலியில் மருத்துவ குணங்கள் குறைவு. ஆனால் சுவை அதிகம்.

சோரியாசிஸ், தோல் தொற்றுக்கள், ரத்தத்தில் உண்டாகும் தொற்றுக்கள், ரத்தக் குறைபாடுகள் ஆகியவற்றை வாழைத் தண்டு போக்குகிறது. பல மருத்துவப் பண்புகளை இது உள்ளடக்கியிருக்கிறது.

வாழைச்சாறு வயிற்றுப்போக்கு, மூல ரத்த ஒழுக்கு, கை கால் எரிச்சல், இருமல், மலத்தில் ரத்தம் வெளியேறுதல், ரத்த சோகை, குடற்புழுக்கள் ஆகியவற்றை போக்குகிறது.

மூலத்தால் கசியும் ரத்தப்போக்கு, வயிற்றுக் கோளாறு, இருமல், சிறுநீர் ஒழுக்கு, கோழைச் சுரப்பு அதிகரித்தல், வயிற்றுப்புண், குடற்புண் போன்றவற்றை வாழைக்காய் குணமாக்குகிறது. ரத்த சிவப்புச் செல்களை உருவாக்குவதில் வாழைக் காய்க்கு நிகரில்லை. அதிகமாக இதை சாப்பிட்டால் வயிற்றில் வாயுத் தொல்லை உண்டாகும்.

வாழைப்பழத்திற்கு இளக்கும் தன்மை உண்டு. இதில் கால்சியம், பொட்டாசியம், சோடியம், பாஸ்பரஸ், சல்பர், மக்னீசியம், இரும்பு, வைட்டமின் ஆகியவை உள்ளன. சில நோய்களுக்கு வாழையை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்களேன்.

தீக்காயம், வெந்நீர் காயம், சூடான எண்ணெய் காயம் குருத்து வாழை இலையை பாதிக்கப்பட்ட இடத்தில் சுற்றி கட்டுப்போடலாம். வாழை இலை அல்லது பூவை கசக்கி பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ சரியாகும்.

காயங்கள் தோல் புண்களுக்கு தேங்காய் எண்ணெயை மஸ்லின் துணி யில் நனைத்து புண்கள்மேல் போட்டு இவற்றின் மீது மெல்லிய வாழை யிலையை கட்டுமாதிரி போடவேண்டும்.

சின்ன அம்மை, படுக்கைப் புண், உடலில் தீக்காயம் பெரிய வாழை இலை முழுவதிலும் தேன் தடவி அதில் பாதிக்கப்பட்டவரை சில மணி நேரம் படுக்கவைக்கவேண்டும். இதை தொடர்ந்து செய்தால் குணமாகும்.

சோரியாசிஸ், தோல் அழற்சி, கொப்புளங்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் வாழை இலையை கட்டி வைக்க வேண்டும்.

குடற்புழுக்கள், நீரிழிவு, அமிலச் சுரப்பு, தொழுநோய், ரத்த சோகை வாழை வேரை தீயில் கொளுத்தி சாம்பலை எடுத்து கால் தேக்கரண்டி சாம்பலை தேனில் குழைத்து சாப்பிட்டுவர மேற்சொன்னவை சரியாகும்.

அஜீரணம், மூலநோய் பாலுடன் ஒரு வாழைப்பழம்சாப்பிட்டுவர அஜீ ரணம் சரியாகும். தொடர்ந்து 23 வேளை சாப்பிட்டு வந்தால் மூலநோய் தீரும்.

காசநோய் அரை கப் தயிரில் வாழைப்பழத்தை பிழிந்து ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தம்ளர் இளநீர் சேர்த்து தினமும் இரண்டு நாள் வீதம் சாப்பிட்டு வர சரியாகும்.

சின்ன அம்மை, டைபாய்டு, மஞ்சட் காமாலை தேனில் வாழைப் பழத்தைப் பிசைந்து தினம் இரு வேளை வீதம் சாப்பிடவேண்டும்.

இருமல் கருமிளகு கால் தேக் கரண்டி எடுத்து பொடி செய்து அதில் பழுத்த நேரந்திரம் பழத்தை கலந்து இரண்டு மூன்று வேளை சாப்பிட்டு வர இருமல் குணமாகும்.

சிறுநீரக நோய்கள் மற்றும் இரத்தக் குறைபாடுகள் நெல்லிச்சாறு அரைக் கரண்டியும் பழுத்த வாழையை கலந்து 23 வேளை சாப்பிட்டு வர மேற் சொன்ன குறைபாடு நீங்கும்.

– தங்கராஜ்

# 9-ன் தத்துவம்


## என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்!

9ன் சிறப்பு தெரியுமா? எண்களில் விசேஷமான எண்ணாக கருதப்படுவது ஒன்பது. அந்த எண்ணில் நீண்ட வாழ்வு எனும் அர்த்தம் பொதிந்திருப்பதாகச் சொல்கின்றனர். சீனர்களின் சொர்க்க கோபுரம், ஒன்பது வளையங்களால் சூழப்பட்டுள்ளது. எகிப்து, ஐரோப்பா, கிரீக் முதலான நாடுகளும் 9ஆம் எண்ணை விசேஷமாகப் பயன்படுத்திப் போற்றுகின்றன. புத்த மதத்தில், மிக முக்கியமான சடங்குகள் யாவும் ஒன்பது துறவிகளைக் கொண்டே நடைபெறும்.

தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினத்தின் சுத்தத்தை 999 என்று மதிப்பிடுவார்கள். பெண்களின் கர்ப்பம், பூரணமாவது ஒன்பதாம் மாத நிறைவில்தான்! ஒன்பது எனும் எண் இன்னும் மகத்துவங்கள் கொண்டது. ஒன்பது என்ற எண்ணுக்கு வடமொழியில் நவம் என்று பெயர். நவ என்ற சொல் புதிய, புதுமை எனும் பொருள் உடையது.

**நவ சக்திகள்:** 1.வாமை, 2.ஜேஷ்டை, 3.ரவுத்ரி, 4.காளி, 5.கலவிகரணி, 6.பலவிகரணி, 7.பலப்பிரமதனி, 8. சர்வபூததமனி, 9.மனோன்மணி.

**நவ தீர்த்தங்கள்:** 1.கங்கை, 2.யமுனை, 3.சரஸ்வதி, 4.கோதாவரி, 5.சரயு, 6.நர்மதை, 7.காவிரி, 8.பாலாறு, 9.குமரி.



**நவ வீரர்கள்:** 1.வீரவாகுதேவர், 2.வீரகேசரி, 3.வீரமகேந்திரன், 4.வீரமகேசன், 5.வீரபுரந்திரன், 6.வீரராக்ஷசன், 7.வீரமார்த்தாண்டன், 8.வீரராந்தகன், 9.வீரதீரன்.

**நவ அபிஷேகங்கள்:** 1.மஞ்சள், 2.பஞ்சாமிர்தம், 3.பால், 4.நெய், 5.தேன், 6.தயிர், 7.சர்க்கரை, 8.சந்தனம், 9.விபூதி.

**நவ ரசம்:** 1.இன்பம், 2.நகை, 3.கருணை, 4.கோபம், 5.வீரம், 6.பயம், 7.அருவருப்பு, 8.அற்புதம், 9.சாந்தம்.

**நவக்கிரகங்கள்:** 1.சூரியன், 2.சந்திரன், 3.செவ்வாய், 4.புதன், 5.குரு, 6.சுக்கிரன், 7.சனி, 8.ராகு, 9.கேது.

**நவமணிகள் (நவரத்தினங்கள்):** 1.கோமேதகம், 2.நீலம், 3.வைரம், 4.பவளம், 5.புஸ்பராகம், 6.மரகதம், 7.மாணிக்கம், 8.முத்து, 9.வைடூரியம்.

**நவ திரவியங்கள்:** 1.பிருதிவி, 2.அப்பு, 3.தேயு, 4.வாயு, 5.ஆகாயம், 6.காலம், 7.திக்கு, 8.ஆன்மா, 9.மனம்.

**நவலோகம் (தாது):** 1.பொன், 2.வெள்ளி, 3.செம்பு, 4.பித்தளை, 5.ஈயம், 6.வெண்கலம், 7.இரும்பு, 8.தரா, 9.துத்தநாகம்.

நவ தானியங்கள்: 1.நெல், 2.கோதுமை, 3.பாசிப்பயறு, 4.துவரை, 5.மொச்சை, 6.எள், 7.கொள்ளு, 8.உளுந்து, 9.வேர்க்கடலை.

சிவ விரதங்கள் ஒன்பது: 1.சோமவார விரதம், 2.திருவாதிரை விரதம், 3.உமாகேச்வர விரதம், 4.சிவராத்ரி விரதம், 5.பிரதோஷ விரதம், 6.கேதாரவிரதம், 7.ரிஷப விரதம், 8.கல்யாணசுந்தர விரதம், 9.சூல விரதம்.

நவசந்தி தாளங்கள்: 1.அரிதாளம், 2.அருமதாளம், 3.சமதாளம், 4.சயதாளம், 5.சித்திரதாளம், 6.துருவதாளம், 7.நிவர்த்திதாளம், 8.படிமதாளம், 9.விடதாளம்.

அடியார்களின் பண்புகள்: 1.எதிர்கொள்ளல், 2.பணிதல், 3.ஆசனம் (இருக்கை) தருதல், 4.கால் கழுவுதல், 5.அருச்சித்தல், 6.தூபம் இடல், 7.தீபம் சாட்டல், 8.புகழ்தல், 9.அமுது அளித்தல்.

விக்ரமார்க்கனின் சபையிலிருந்த 9 புலவர்கள். நவரத்னங்கள் எனச் சிறப்பிக்கப்படுவர்: 1.நவரத்னங்கள் (முனிவர்கள்) தன்வந்த்ரி, 2.க்ஷணபகர், 3.அமரஸிம்ஹர், 4.சங்கு, 5.வேதாலபட்டர், 6.கடகர்ப்பரர், 7.காளிதாசர், 8.வராகமிஹிரர், 9.வரருசி.

அடியார்களின் நவகுணங்கள்: 1.அன்பு, 2.இனிமை, 3. உண்மை, 4.நன்மை, 5.மென்மை, 6.சிந்தனை, 7.காலம், 8.சபை, 9.மவுனம்.

நவ நிதிகள்: 1. சங்கம், 2. பதுமம், 3. மகாபதுமம், 4. மகரம், 5. கச்சபம், 6. முகுந்தம், 7. குந்தம், 8. நீலம், 9. வரம்.

நவ பிரம்மாக்கள் : 1.குமார பிரம்மன், 2.அர்க்க பிரம்மன், 3.வீர பிரம்மன், 4.பால பிரம்மன், 5.சுவர்க்க பிரம்மன், 6.கருட பிரம்மன், 7.விஸ்வ பிரம்மன், 8.பத்ம பிரம்மன், 9.தராக பிரம்மன்.


நவக்கிரக தலங்கள்: 1. சூரியனார் கோயிவில், 2.திங்களூர், 3.வைத்தீஸ்வரன் கோவில், 4.திருவெண்காடு, 5.ஆலங்குடி, 6.கஞ் சனூர், 7.திருநள்ளாறு, 8.திருநாகேஸ்வரம், 9.கீழ்ப்பெரும்பள்ளம்.

நவபாஷாணம்: 1.வீரம், 2.பூரம், 3.ரசம், 4.ஜா திலிங்கம், 5.கண்டகம், 6.கவுரி பாஷாணம், 7.வெள்ளை பாஷாணம், 8.ம்ருதர்சிங், 9.சிலாஷத்.

நவதுர்க்கா: 1.ஸித்திதத்ரி, 2.கஷ்முந்தா, 3.பிரம்மாச்சாரினி, 4.ஷைலபுத்ரி, 5.மகா கவுரி, 6.சந்திரகாந்தா, 7.ஸ்கந்தமாதா, 8.மகிஷாசுரமர்த்தினி, 9.காளராத்ரி.

நவ சக்கரங்கள்:

1.த்ரைலோக்ய மோகன சக்கரம், 2.சர்வசாபுரக சக்கரம், 3.சர்வ சம்மோகன சக்கரம், 4.சர்வ சவுபாக்ய சக்கரம், 5.சர்வார்த்த சாதக சக்கரம்,




6.சர்வ ரக்ஷவகர சக்கரம், 7.சர்வ ரோஹ ஹர சக்கரம், 8.சர்வ ஸித்தி ப்ரத சக்கரம், 9.சர்வனந்தமைய சக்கரம்.

நவநாதர்கள்: 1.ஆதிநாதர், 2.உதய நாதர், 3.சத்ய நாதர், 4.சந்தோஷ நாதர், 5.ஆச்சாள் அசாம்பயநாதர், 6.கஜ்வேலி கஜ்கண்டர் நாதர், 7.சித்த சொவ்றங்கி 8.நாதர், மச்சேந்திர நாதர், 9.குரு கோரக்க நாதர்.

உடலின் நவ துவாரங்கள்: இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு மூக்குத் துவாரங்கள், ஒரு வாய், இரண்டு மலஜல துவாரங்கள்.

உடலின் ஒன்பது சக்கரங்கள்: 1.தோல், 2.ரத்தம், 3.மாமிசம், 4.மேதஸ், 5.எலும்பு, 6.மஜ்ஜை, 7.சுக்கிலம், 8.தேஜஸ், 9.ரோமம்.

18 புராணங்கள், 18 படிகள் என அனைத்தும் 9ன் மூலமாக தான் உள்ளன. காயத்ரி மந்திரத்தை 108 முறை ஜபிக்க வேண்டும். எல்லா தெய்வத்தின் நாமாவளியும் ஜப மாலையின் எண்ணிக்கையும் இதை அடிப்படையாகக் கொண்டதுதான்!

புத்த மதத்தினர் 108 முறை மணியடித்து, புது வருடத்தை வரவேற்றுக் கொண்டாடுகின்றனர்.

சீனாவில், 36 மணிகளை மூன்று பிரிவாகக் கொண்டு, சு ஸூ எனப்படும் மாலையைக் கொண்டு ஜபம் செய்வார்கள்.

ஸ்ரீகிருஷ்ணருக்குப் பிரியமான மாதம் மார்கழி. இது வருடத்தின் 9வது மாதம்! மனிதராகப் பிறந்தவன் எப்படி வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிய ஸ்ரீராமபிரான் பிறந்தது, 9ஆம் திதியான நவமி நாளில்தான்.

9 என்ற எண்ணை கேளிக்கையாக எண்ணாமல் புராணங்களிலும், நடைமுறையிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை போற்றுவோம்.

– B. சரவணன்

# மலைக்க வைக்கும் தமிழக காடுகள்

## முதலமைச்சர் ஸ்டாலின் 920 கோடி மாஸ்டர் ப்ளான்

ஒரு அரசுக்கு நாட்டு நலன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் காட்டுநலன். அதை உணர்ந்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இந்த ஆட்சியில் காடுகளைக் காப்பாற்றுவதற்காக பல்வேறு அறிவிப்புகள் கடந்த ஓராண்டுக் காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தேவாங்குகளுக்கு என்று தனி சரணாலயம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து மேட்டூர் நீர்ப்பரப்பு பகுதிகளை உள்ளடக்கிய தென் காவிரி வன உயிரின சரணாலயம் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் முதல் பல்லுயிர் பாரம்பரியத்தலமாக மதுரை அரிட்டாபட்டியை சமீபத்தில் தான் தமிழ்நாடு அரசு அறிவித்தது.

**920 கோடி செலவில் பல்லுயிர்பாதுகாப்பு:**

ஆக, ஸ்டாலின் தலைமையிலான அரசு அமைந்தது முதல் நீர் நிலைகளில் தொடங்கி, மலைத் தொடர்களைக் காப்பது வரை மிகத் தீவிரமாக இயக்கி வருகிறது. முதலமைச்சர் ஸ்டாலின், “காடுகள் இன்றி நீர் வளம் சிறக்காது. நீர்வளம் இன்றி வேளாண்மை வளமாகாது. எனவே, வளமான எதிர்காலத்திற்குக் காடுகள் அவசியம். காடுகள் வளம் பெற வன உயிரினங்கள் அவசியம்“ என்று கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற மாநில வன உயிரின வாரிய கூட்டத்தில் எடுத்துக் கூறினார். இந்த வாரியத்திற்காக ஸ்டாலின் தலைமையில் 28 உறுப்பினர்களை அரசு நியமித்துள்ளது. இந்த உறுப்பினர்கள், அரசுக்கு வன உயிரின பாதுகாப்பு தொடர்பாகக் கொள்கைகள் வகுக்கவும் வனப்பகுதிகளில் வாழும் பொதுமக்கள், பழங்குடியினருடன் இணைந்து வன உயிரினங்களைப் பாதுகாப்பது போன்ற பணிகளை மேற்கொள்வார்கள் என்றும் அரசு விளக்கம் அளித்துள்ளது. தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமை கால நிலை மாற்ற எதிர்வுணர்வு திட்டம் 920 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது கூடுதல் தகவல்.

**23.69% இருந்து 33% ஆக உயர்த்த லட்சியம்:**

தமிழ்நாட்டில் மரங்கள் அடர்ந்த வனப்பகுதி ஏறக்குறைய 23.69% ஆக உள்ளது. அதை 33%




ஆக உயர்த்துவதே அரசின் லட்சியம் என்றும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைப்பற்றி இதைவிட இன்னொரு குட்நியூஸ் இருக்கிறது. இந்திய அளவில் அதிகமான மரவகைகள் உள்ள மாநிலத்தில் தமிழ்நாடு 2வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் காட்டுவளத்தில் தமிழகம் 9வது இடத்தில் இருக்கிறது. ஆக, வனவளத்தைப் பொறுத்தளவில் தமிழ்நாட்டிற்கு நல்ல ரேட்டிங் இருக்கிறது. இந்த வனங்களில் 1559 வகையான அரிய மருத்துவக் குணங்கொண்ட மூலிகை தாவரங்கள் உள்ளன என்கிறது புள்ளி விவரம். அதில் நம் நிலத்திற்கே உரிய 533 வகையான மூலிகைகள் இருக்கின்றன. இதில்அழிவின் விளிம்பிலுள்ளவை என்று 230 வகை தாவரங்களை இனம் கண்டுள்ளனர். இதுபோன்றே அழிவின் விளிம்பில் 140 உயிரினங்கள் இருப்பதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. மேலும் 331 வகையான நம் நிலத்திற்கே உரிய பறவைகள், ஊர்வன, பாலூட்டிகள் என்று ஆக மொத்தமாக 818 உயிரினங்கள்உள்ளன. இவற்றைக் குறைந்து விடாமல் காப்பாற்றுவதில்தான் வருங்கால வளமான வாழ்க்கை அமைந்திருக்கிறது என்று சொல்லலாம். இந்த விவரங்களை வைத்துப்பார்த்தால் தமிழ்நாடு ‘உயிர்ப்பன்மை’யில் நல்ல தரவரிசையில் இருக்கிறது என நம்பிக்கைக் கொள்ளலாம். இந்த விவரங்களைக் கொண்டு மட்டும் வனத்தைச் செழிப்பாக்கிவிட முடியாது. அதை நிர்வாகம் செய்ய ஒரு சரியான அரண்




அமைக்கவேண்டும். அப்போதுதான் இவை சமூக விரோத சக்திகளால் சூறையாடடப்படாமல் காப்பாற்றப்படும். அதனடிப்படையில் பார்த்தால் 152 இந்திய வனப்பணி அதிகாரிகளும் 109 மாநில வனப்பணியாளர்களுமாகச் சேர்ந்து கூடவே 9578 உதவி பணியாளர்கள் காட்டைக் காப்பாற்ற களத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டின் மிக முக்கியமான புலிகள் சரணாலயம்:**

இந்திய அளவில் தமிழ்நாட்டில் மட்டும் வனவளம் என்பது பலவகை சரணாலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. புலிகள் காப்பகங்கள், வனஉயிரின சரணாலயங்கள், பறவை சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், உயிர்க்கோளகாப்பகங்கள், யானைகள் காப்பகங்கள் எனப் பல நிலைகளில் வனமேம்பாடு செயல்பட்டு வருகின்றன. இதில் புலிகள் காப்பகங்கள் எனப் பார்த்தால் களக்காடு முண்டாந்துறையில் அமைந்துள்ளது. இதில் 8 புலிகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் 20 புலிகள் உள்ளன. முதுமலை காப்பகத்தில் 103 புலிகளும் சத்தியமங்கலத்தில் 83 புலிகளும் திருவில்லிப்புத்தூர் மேகமலை காப்பகத்தில் 15 புலிகளும் இருப்பதாகக் கணக்கெடுப்புகள் கூறுகின்றன.

ஆக மொத்தம் புலிகளுக்கு என்று தமிழ்நாட்டில் 5 காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது இந்திய அளவில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. காட்டின் கோட்பாட்டின் படி புலிகளைக் காப்பாற்றினால் தான் காடு காப்பாற்றப்படும். அதாவது ஒரு புலி உள்ள காடு பசுமையாக இருக்கும். மான்களின் எண்ணிக்கையை அதிகரிக்க விடாமல் காக்கும். மான்கள் அதிகமானால் வனத்தில் உள்ள புல் வகைகள் அதிக அளவில் அழிக்கப்படும். புற்கள் அழிந்தால் மலையில் நீர்சேமிப்பு பாதிக்கப்படும். ஆக, புலி என்பது முழுக்காட்டின் பல்லுரியிர் சுழற்சியையும் காக்க உதவி செய்கிறது. அதைத்தான் நாம் தொடக்கத்திலேயே முதலமைச்சர் ஸ்டாலின் உரையின் மூலமாகக் குறிப்பிட்டோம்.

**தமிழ்நாட்டில் 17 வன உயிரின சரணாலயங்கள்:**

அடுத்து வன உயிரின சரணாலயங்கள் எனப்பார்த்தால் ஆக மொத்தம் தமிழ்நாட்டில் 17 சரணாலயங்கள் உள்ளன. முதுமலை வன உயிரின சரணாலயம், இந்திராகாந்தி வன உயிரின சரணாலயம், முண்டாந்துறை, களக்காடு, திருவல்லிபுத்தூர், கோடியக்கரை, வல்லநாடு வெளிர்மான் சரணாலயம், கன்னியாகுமரி வனஉயிரின சரணாலயம், சத்தியமங்கலம், மேகமலை, கோடியக்கரை, கொடைக்கானல், கங்கைக்கொண்டான், வடகாவிரி, நெல்லை, தேவாங்குவன உயிரின சரணாலயம், தென்காவிரி வன உயிரின சரணாலயம் எனத் தமிழ்நாட்டைச் சுற்றி மிகப்பசுமையான சரணாலயங்கள் இயக்கிவருகின்றன. இதைப் போலவே பறவைகள் சரணாலயம் எனப்பார்த்தால்


தமிழ்நாடு முழுவதும் 17 உள்ளன. இதில் பலரும் அறிந்தது வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்தான். ஆனால் கரிக்கிளி பறவைகள் சரணாலயம் அதிகம் அறியப்படாத பகுதி. இவை தவிரப் பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம், வேட்டக்குடி, காஞ்சிரங்குளம், சித்திரங்குடி, உதயமார்த்தாண்டபுரம், வடுவூர், கூத்தங்குளம் காடங்குளம், கரைவெட்டி, வெள்ளேடு, மேலச்செல்வனூர் கீழச்செல்வனூர், தீர்த்தங்கல், சக்கரக்கோட்டைகுளம், ஒசுடுஏரி, கழுவேலிகாயல் பறவைகள் சரணாலயம், நஞ் சராயன்குளம் பறவைகள் சரணாலயம் எனப் பெரிய பட்டியல் நீள்கிறது.

**தமிழ்நாடு முழுவதும் 260 கோடி நாற்றுகள்:**

பறவைகள், புலிகளுக்குத் தமிழகம் எப்படிச் சிறந்த வாழ் நிலமாக விளங்குகிறதோ அதேபோல், யானைகளுக்கும் சிறந்த வாழ்விடமாக விளங்கிவருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் 5 யானை காப்பகங்கள் உள்ளன. நீலகிரி, நீலாம்பூர், பெரியார் யானைகள் காப்பகம், ஆனை மலை பரம்பிக்குளம் யானைகள் காப்பகம், அகத்தியர் மலை யானைகள் காப்பகம் ஆகியவை பட்டியலில்அடங்கும். இதில் அகத்தியர் மலை யானைகள் காப்பகம் ஸ்டாலின் முதலமைச்சராகப் பதவியேற்றதும் அறிவிக்கப்பட்ட காப்பகமாகும். 2017ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அகத்தியர் மலை யானைகள் காப்பகத்தில் மட்டும் 2,761 யானைகள் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவரது ட்விட்டர் பதிவு ஒன்றில் இக்காப்பகம் குறித்து அளித்துள்ள தகவலின்படி ‘இம்மலையானது 1,197 சதுர கி.மீ பரப்பளவு விரிந்து பரந்துள்ளது’ எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களைக் கடந்து 260 கோடி நாற்றுகளைத் தமிழ்நாடு முழுவதும் 10 ஆண்டுகளில் நட தமிழ்நாடு அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2.8 கோடி நாற்றுகள் 2022 முதல் 23 வரை நட்டு வளர்க்கப்பட்டுள்ளன. இவைதவிர 360 நர்சரிகள் இயங்கிவருகின்றன. ஆக, காடு வளர்ந்தால் நாடு தானே வளரும் என்ற புதிய பாதையில் முதலமைச்சர் ஸ்டாலினின் கனவுக்குப் பின்னால் இத்தனை வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

**– தமிழ் வீரன்**




Printed by **NV SIVASHANKAR** and Published by **NV SIVASHANKAR** on behalf of PENA KURAL, Tamil Monthly and Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. And Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. Editor: **RATHIKA S**.

Ministry of Education
Government of India

Azadi Ka Amrit Mahotsav




# PM SHRI
## PM ScHools for Rising India

*Empowering students with 21st century skills*

- More than 14500 Schools across the country to emerge as Exemplar Schools
- Centrally sponsored scheme (PM SHRI Schools) will be for a period of 5 Years i.e. 2022 - 2027
- PM SHRI schools will showcase all the components of NEP 2020
- Total project cost - Rs. 27360 crore over a period of 5 years
- Total Central share will be Rs. 18128 crore



@EduMinOfIndia @EduMinOfIndia HRDMinistry @eduminofindia










Registered with REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA, **R.Dis. No.: 939/2022** Title Code: TNTAM24489

